நிர்வாக அறிக்கை

# 2012

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்



நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு

# நிர்வாக அறிக்கை

# 2012


## பதிவு செய்யப்பட்ட அலுவலகம்

1 ஆம் மாடி, தேசிய வீடமைப்புத் திணைக்கள கட்டிடம்,
சேர் சிற்றம்பலம் ஏ, கார்டினர் மாவத்தை,
கொழும்பு - 02

தொலை பேசி :- **24447429 / 2447432** பெக்ஸ்**: 2423606**

மின்னஞ்சல் **: cmastaff@sltnet.lk**

www.condominium.lk

# பணிப்பாளர் சபை

சட்டத்தரணி கபில கமகே
*(2010.05.13 தொடக்கம்)*
தலைவர்
கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை

ஜீ.யூ.உபவங்ஷ
பொது முகாமையாளர்
கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை

தமித்த குமாரசிங்ஹ
பொது பணிப்பாளர்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு

சாந்தினி விஜேவர்த்தன
பணிப்பாளர்
தேசிய திட்டமிடல் திணைக்களம்
பொது திறைசேரி (திறைசேரி பிரதிநிதி)

டீ.சீ.ஸ்ரீபத்தன
பிரதிப் பணிப்பாளர்
முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

கே.எல்.எல.பிரேமநாத்
பொது முகாமையாளர்
தேசிய நீர் வழங்கள் வடிகாலமைப்புச் சபை

மேஜர் ஜெனரால் வசந்த குமார
*(2011.08.29 தொடக்கம் 2011.10.20 வரை )*
பிரிகேடியர் மஹிந்த முதலிகே (ஆர்.டிபில்யூ.பீ/ ஆர்.எஸ்.பீ)
*(2012 வைகாசி தொடக்கம்)*
பொது முகாமையாளர்
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை

பத்ராணி ஜயவர்த்தன
நகர ஆணையாளர்
கொழும்பு மாநகர சபை

சாந்தா பீ லியனகே
நகர ஆணையாளர்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர - கோட்டே நகர சபை

கே.பீ.ஆர்.தம்மிக்க நாமல் முதுகல
நகர ஆணையாளர்
தெஹிவளை - கல்கிச்சை மாநகர சபை

எச்.டீ.சந்திமா ஜானகி
*(2012 தை - சித்திரை)*
எச்.என்.எஸ.அங்கமன
*(2012 வைகாசி - ஆனி )*
ஏ.எல்.எஸ்.மல்வென்ன
*(2012 ஆவனி - மார்கழி)*
நகர ஆணையாளர்
மொட்டுவ மாநகர சபை

நிஹால் ப்ரணாந்து
பொது பணிப்பாளர்
நகர அபிவிருத்தி சபை




# நோக்கு

நாட்டின் வீடமைப்பு தேவைகளுக்கான தீர்வெனும் வகையில் கூட்டாட்சிக் குடியிருப்புகள்

# அரும்பணி

கூட்டாட்சி ஆதனங்களைக் குடியிருப்பாளர்களின் நன்மை மற்றும் நலனோம்பலுடன் ஒத்துவரத்தக்க வகையில் நிர்மாணித்தல், அவ்வாதனங்களை முறையாக நிர்வகித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்யும் பொருட்டு முகாமைத்துவக் கூட்டுத்தா-பனங்களை நிறுவி ஆதனங்களைப் பராமரித்தல் ஆகிய பணிகளை ஒழுங்குறுத்துதல்.

# கூட்டிணைந்த தகவல்கள்

திணைக்களம்

கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை

தாபிக்கப்பட்ட ஆண்டு

2003 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி
1973 ஆம் ஆண்டின் சட்ட இல 10
பொது வசதிகள் சபை மீளாய்வு
2003 ஆம் ஆண்டின் சட்ட இல 24

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்

1 ஆம் மாடி, தேசிய வீடமைப்புத் திணைக்கள
கட்டிடம்,
சேர் சிற்றம்பலம் ஏ, கார்டினர் மாவத்தை,
கொழும்பு - 02

தொலைபேசி ∴ பெக்ஸ்

2447429 / 2447432
பெக்ஸ் : 2423606

மின்னஞ்சள் (ஈ - மெயில்)
cmastaff@sltnet.lk , it@condominium.lk

இணையத்தளம் (வெப்)

www.condominium.lk

# உள்ளடக்கம்

1

## நிர்வாக அறிக்கை


நிர்வாக அறிக்கை

அதிகார சபையின் அதிகாரங்கள்

நோக்கங்கள்

மக்கள் சேவைகள்

அதிகார சபையின் பணிகள்

முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தை, பதிவு செய்தல் தாபித்தல்

கூட்டாட்சி ஆதனங்கள் தொடர்பாக அறிவுறுத்தல்

இணைந்த வீட்டுரிமை சட்டத்திருத்தம்

கூட்டாட்சி ஆதனங்களின் பிணக்குகளை தீர்த்து வைத்தல்

அதிகார சபையின் நிதி மற்றும் செயற்பாட்டு அறிக்கைகள்

செயல் ரீதியான திட்டங்கள்

தொடர்மாடி வீட்டுத் திட்டங்களில் புது அம்சங்களை புதுபித்தல்

அபிவிருத்தி நடவடிக்கைகள்

மதிப்பீடு


2


கணக்குகளும் நிதியறிக்கையும்


3

## கணக்காய்வு அறிக்கை

# கூட்டுத் திட்டம்
## கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகார சபை



# நோக்கங்கள்

- கொண்டமினியப் பொதிகளின் கட்டுப்பாடு, முகாமைத்துவம், பாதுகாப்பு, ஆகியவற்றின் நிர்வாகி, கொண்டமினியம் சொத்து அல்லது உப கொண்டமினியம் சொத்து ஆகியவற்றின் பொது இருப்பிடம் மற்றும் பொது வசதிகள்,

- உறுதிப்படுத்திய பொது இருப்பிடம், பொது வசதிகள் ஆகியவை கொண்டமினியம் சொத்து அல்லது உப கொண்டமினியம் சொத்து போன்றவற்றை ஒழுங்கான நல்ல முறையில் பாதுகாப்பதுடன் சொத்துக்களை சிறந்த சேவையாற்றல் மற்றும் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கு அல்லது உரிமையாளர், உரிமையாளர்களுக்கு உதவும் அவ்வேளையில் இவற்றிற்கு ஏற்படுகின்ற திருத்தத்திற்காக வேகமாக, பாதுகாப்பாக வெளியில் கொண்டு செல்லும் சம்பவம் முகாமைத்துவ கூட்டுத்தாபனம் அல்லது உரிமையாளர்களின் சுறுசுறுப்பான நடவடிக்கைகளின் குறைபாடாகும்.

- உறுதிப்படுத்திய அனைத்து கட்டிடங்களையும் சேர்த்துக் கொள்ளல் இந்த கொண்டமினியம் பொதிகளுக்கு உத்தரவாதமின்றி மறுபடியும் தீ போன்று அபாயகரமானது. நாகரீகமான கிளர்ச்சி, கலகம் அல்லது காப்புறுதி அல்லது காப்புறுதி செய்து அதன் வேண்டுகோளுக்கு இணங்க முகாமைத்துவ கூட்டுத்தாபனம் அல்லது அதன் உரிமையாளர்கள் மற்றும் இது மாதிரியான பயிற்சிக் கட்டணங்கள் அல்லது கட்டணங்கள் மீண்டும் பெறக் கூடியதாகும்.

- இது போன்று அகற்றப்பட்ட எல்லா அதிகாரமற்ற நிர்மாணங்களை எழுப்புதல், வெளியில் கொண்டு போவதற்காக தனித் தனியான உரிமையாளர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் இம்மாதிரியான கொண்டமினியம் பொதிகளை அல்லது மற்றுமொரு நபரை நேர் எதிர்மறையாக பதிவு செய்த கொண்டமினியம் திட்டமே கொண்டமினியம் சொத்து அல்லது பதிவு செய்யப்பட்ட உப கொண்டமினியம் சொத்து ஆகும்.

- இது போன்ற முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களின் கொண்டமினியம் சொத்துக்களின் அல்லது உப கொண்டமினியம் சொத்துக்களின் ஒழுங்கான செயற்பாடுகள், பாதுகாப்பு மற்றும் நிர்வாக நடிவடிக்கைகள் சுறுசுறுப்பாகவும், பாதுகாப்பாகவும் அமையும்.

- முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திற்கு உதவுகின்ற உரிமையாளர் அல்லது உரிமை கோருபவர்களின் கொண்டமினியம் பொதிகள் இது மாதிரியான கொண்டமினியம் சொத்துக்களின் அல்லது உப கொண்டமினியம் சொத்துக்களில் அளிக்கப்பட்ட வசதிகள் தண்ணீர், சாக்கடை, வடிகால்கள், காஸ், மின்சாரம், குப்பை அகற்றல், குளிரூட்டி, தொலைபேசி, வானொலி போன்ற சேவைகள் ஆகும்.

- இடமாற்றம் செய்யப்பட்ட உள்ளுரைச் சேர்ந்த அதிகார சபையின் கீழ் உள்ள வீதிகள், மதிப்பீடு செய்தல், கடன்கன், பூந்தோட்டங்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் இன்னும் திறந்த வெளிகள் போன்றவற்றை பாவிப்பதற்கு கொண்டமினிய சொத்துக்களின் அல்லது உப கொண்டமினியச் சொத்துக்களின் கீழ் உள்ள கொண்டமினியப் பொதிகளின் உரிமையாளர்களிற்கு உரிமை உண்டு.

- இதுபோன்ற கொண்டமினிய சொத்துக்களின் அல்லது உப கொண்டமினியச் சொத்துக்களின் கீழ் உள்ள கொண்டமினியப் பொதிகளிற்கு கொடுக்கப்பட்ட மற்றும் திருத்த வேலைகள்.

- கட்டிடங்களின் அபிவிருத்தி தொடர்பான அவதானிப்புக்கள் பதிவு செய்யப்பட்ட தற்காலிக கொண்டமினிய சொத்துக்களின் பாதுகாப்பான, உத்தரவாதம் அளிக்கப்பட்ட, ஒழுங்கமைப்பு செய்யப்பட்ட பந்தயக் கட்டிற்கான வட்டிகள் மற்றும் இது போன்ற பாதுகாப்பான வட்டிகளின் தலையீடு எப்போதும் அவசியம்.

- அரசாங்கத்தின் அனுமதியுடனே அமைச்சர் முறைப்படியுடன் கீழ்ப்படிவுள்ள கொண்டமினியம் மீள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் அடங்கியுள்ள முதலீட்டுத் திட்டங்களை மேற்கொண்டுள்ளார்.

- தேசிய வீடமைப்பு அதிகார சபை அல்லது நகர அபிவிருத்தி அதிகார சபை அல்லது உள்ளுராட்சி அதிகார சபை அல்லது பிற அரசாங்க ஸ்தாபனங்கள் அல்லது பிற தனியார் நிறுவன அபிவிருத்தியாளர்கள் ஒப்புக் கொண்டதற்கு இணங்க உத்தரவாதம் அளிக்கப்பட்ட இது போன்ற கொண்டமினியம் மீள் அபிவிருத்தி திட்டங்கள் அல்லது இணக்கப்பாடுடன் நிறைவேற்றப்பட்ட கொண்டமினியம் மீள் அபிவிருத்தித் திட்டங்கள், மற்றும் இவை போன்ற நிகழ்ச்சிகளிற்கு அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது.

- இணக்கப்பாடுடன் பூர்த்தி செய்யப்பட்ட ஏதாவது கொண்டமினியம் கட்டிடங்களை பார்வையிடுவதற்கு பதிவு செய்யப்பட்ட உப கெர்ணடமினியம் திட்டம் அல்லது தற்காலிக கொண்டமினியம் திட்டம் போன்ற ஏதாவது சம்பவங்களில் உரிமையாளர்கள் நிறைறவு செய்யப்பட்ட இதுபோன்ற திட்டங்களில் குறை காணலாம்.

- அபிவிருத்தி அல்லது மீள் அபிவிருத்தி செய்யப்பட்ட காணிகளை கை மாற்றப்படுவதற்கு அதிகாரசபை எதிர்ப்பு கூறும்.

- மேற்கூறப்பட்ட நோக்கத்திற்காக அனேகமாக, அத்தியாவசியமான இது போன்ற எல்லா வேறு சட்டங்களும் அல்லது எல்லாவகையான சட்டங்களும் அதிகமாக எதிர்ப்புக் கூறும்.

- முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திற்கு உதவுகின்ற தீர்மானம் அல்லது பராமரிப்பு போன்ற பாவனைகளுக்கான உரிமையாளர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் மற்றும் ஏதாவது கொண்டமினியம் பொதிகள், அதுபோன்ற திறன் வாய்ந்த வீதிகள், மதிப்பீடு செய்தல், கடன்கள், பூந்தோட்டங்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் இன்னும் திறந்த வெளிகள் அல்லது நேரடியாக தலையீடு செய்யும் சுறுசுறுப்பாக உள்ள போதில் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்தின் ஸ்தாபித்தல் மற்றும் பராமரித்தல் போன்ற திறமையான செயல்.

# அதிகாரசபையின் அதிகாரங்கள்

## *2003 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, பொது வசதிகள் சபை (திருத்தச்) சட்டம்.*

*6.முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம் பிரிவு இத்தால் நக்கஞ்செய்யப்பட்டுப் பின்வரும் பிரிவு அதற்குப் பதிலாக இடப்படுகின்றது. :-*

*6. அதிகாரசபையானது அதன் குறிக்கோள்களை முறையாகக் கொண்டு நடாத்துவதற்காக, பின்வரும் தத்துவங்களுள் ஏதேனும் ஒன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றைப் பிரயோகித்தல் வேண்டும் :-*

*(அ) ஏதேனும் அசைவற்ற அல்லது அசைவுள்ள ஆதனத்தைக் கொள்ளுதல், உரித்தாக்குதல், மானியம் அல்லது கொள்வனைமூலம் கொள்ளுதல் அல்லது கொடைவகையாக அல்லது வேறுவிதமாகப் பெறுதல் அத்துடன் அத்தகைய ஆதனத்தை வைத்திருத்தல், முகாமைசெய்தல், விற்றல், ஒப்படைத்தல், கொடுத்து மாற்றுதல், குத்தகைக்கு விடுதல் அல்லது வேறு வகையாகக் கையுதிர்த்தல் :*

*(ஆ) உள்ளூரிலாயினுஞ்சரி வெளிநாட்டிலாயினுஞ்சரி ஏதேனும் மூலத்திலிருந்து நன்கொடைகளையும் மரணசாதனக் கையளிப்புக்களையும் பெறுதல் :*

*(இ) பணிகளை நிறைவேற்றுவதில் அதனால் தேவைப்படுத்தப்படும் பணங்களைக் கடனாகப் பெறுதல் :*

*(ஈ) அதிகாரசபையினால் வாடகைக்கு விடப்பட்ட ஏதேனும் காணிச் சிறுகூறுகளாக அல்லது கட்டிடங்களுக்காக அல்லது கூட்டாட்சி ஆதனத்துக்காக வாடகை விதித்தல் :*

*(உ) இச்சட்டத்தின்கீழ் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் அதிகார சபையினால் ஆற்றப்பட்ட எவையேனும் சேகைளுக்காக கட்டணங்கள் அல்லது கொடுப்பனவுகள் விதித்தல் :*

*(ஊ) கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளில் சொந்தக்காரர்களுக்குள்ள அக்கறைகளுக்கு விகிதாசாரமாக அவர்களிடமிருந்து எவையேனும் கட்டுப்பணங்கள் அறவிடுதல் :*

*(எ) கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் பொது வசதிகளுக்கு அல்லது பொது அம்சங்களுக்குச் சொந்தக்காரர் உட்பட எவரேனும் ஆளினால் விளைவிக்கப்பட்ட ஏதேனும் சேதத்தைச் சீர்செய்வதில் உணரப்பட்ட செலவுகளை அவரிடமிருந்து அறவிடுதல் :*

*(ஏ) முகாமைக் கூட்டுத்தாபனத்தின் அல்லது கூட்டாட்சியாதனச் சிறுகூறின் சொந்தக்காரரின் அல்லது இருப்பாட்சியாளரின் வேண்டுகோளின்பேரில், ஏதேனும் கூட்டாட்சியாதனச் சிறுகூறின் மறுசீரமைப்பு, பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு உட்பட்ட எவையேனும் சேவைகளை அதற்கு வழங்குதலும் அதற்கான இறுப்பனவுகளை விதித்தலும் :*

*(ஐ) கட்டிட நிர்மாண வேலையைப் பொறுப்பேற்றல் :*

*(ஒ) ஏனைய கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளுக்கும் அல்லது கூட்டாட்சியாதனச் சிறுகூறுகளின் பொது அம்சங்களுக்கும் வசதிகள் அளிப்பனவாய குழாய்கள், கம்பிகள், வடங்கள், கம்பிவடக் குழாய்கள் என்பவற்றைப் பரிசோதிக்கும், பழுதுபார்க்கும் அல்லது புதுப்பிக்கும் நோக்கத்துக்காக அல்லது கூட்டாட்சி ஆதனத்தின் பொது வசதிகளை அல்லது பொது அம்சங்களைப் பராமரிக்கும், புதுப்பிக்கும், மறுசீரமைக்கும் அல்லது பழுதுபார்க்கும் நோக்கத்துக்காக அல்லது கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் அதிகாரமளிக்கப்படாத கட்டிட நிர்மாணங்களை அகற்றும் அல்லது அடித்தழிக்கும் நோக்கத்துக்காக அல்லது எவையேனும் இயைபான நியதிச்சட்டத்தேவைப்பாடுகள் இணங்கியொழுகப் படுகின்றனவா என நிச்சயப்படுத்தும் நோக்கத்துக்காக அல்லது இப்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட தத்துவங்களுள் எதனையும் பிரயோகிப்பதில் நியாயமான எல்லா வேளைகளிலும் ஏதேனும் கூட்டாட்சியாதனச் சிறுகூறுக்குள், ஒன்றில் தாமாக, அல்லது அதன் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட முகவர் மூலம், நுழைதல் :*



*(ஓ) பதிவு செய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சி ஆதன வரைபடத்தில் காட்டப்பட்ட கட்டிட நிர்மாணத்தின் முன்னேற்றத்தைப் பார்வையிட்டு மீளாய்வு செய்யும் நோக்கத்துக்காக, தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனத்தின் ஏதேனும் காணிச் சிறுகூறுக்குள், நியாயமான எல்லா வேளைகளிலும், ஒன்றில் தாமாக அல்லது அதன் முறையாக அதிகார மளிக்கப்பட்ட முகவர்கள் மூலம் நுழைதல் :*



*(ஔ) அதிகாரசபையின் குறிக்கோள்களுள் எதனையும் நிறைவேற்றும் நோக்கத்துக்காக நியாயமானளவு தேவைப்படும்வாறான அத்தகைய ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளுதல் மற்றும் அத்தகைய உடன்பாட்டொழுங்குகளைச் செய்தல் :*

*(க) கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பகுதியளவிலான கூட்டாட்சி ஆதனத்தின் அல்லது பதிவு செய்யப்பட்ட தற்போதைக்கான கூட்டாட்சி ஆதனத்தின் முாமைத்துவக் கூட்டுத்தாபனத்துக்கும் சொந்தக்காரருக்கும் அல்லது சொந்தக்காரருக்கும் இருப்பாட்சியாளருக்கும் அல்லது சொந்தக்காரருக்கும் கொள்வனைகாரருக்கும் அல்லது சொந்தக்காரருக்கும் ஈடுபெற்றவருக்கும் அல்லது ஈடுபெற்றவருக்கும் உத்தேச கொள்வனைக்காரருக்கும் அல்லது ஈடுவைத்தவருக்கும் ஈடுபெற்றவருக்கும் இடையேயான பிணக்குகளைத் தீர்த்தல் :*



*(ங) அதிகாரசபையின் வேலையைக் கொண்டு நடாத்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் தொழிலுக்கமர்த்துதலும் அதன் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் :*

*(ச) அதிகாரசபையின் அபிப்பிராயப்படி, அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதனை இயலச் செய்வதற்கு அவசியமான எல்லா விடயங்களையும் செய்தல்" .*

# அதிகார சபையின் மக்கள் சேவைகள்

கூட்டாட்சி ஆதனங்களின் பொது வசதிகளின் முகாமைத்துவம், பராமரிப்பு, கட்டுப்பாடு மற்றும் நிர்வாகம் செய்தல், அவற்றை முறையாக ஈடேற்றுவதற்காக முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கு வழிகாட்டுதல், அதற்காக ஒத்துழைத்தல் மற்றும் பராமரிப்புப் பணி-களைத் தவறவிடுகின்ற வேளைகளில் நேரடியாக இடையீடு செய்தல்.

பொது வசதிகளும் பொது அம்சங்களும் முறையாகப் பேணிவரப்படுவதற்கும் முறையாக பராமரிக்கப்படுவதற்கும் ஆவனசெய்தல்.
பொது வசதிகளும் பொது அம்சங்களும் அவ்வாதனத்தின் குடியிருப்பாளர்களின் நன்மைகள் மற்றும் நலனோம்பலுக்காக திருப்தியடையத்தக்க வகையில் வழங்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துதல்.

கூட்டாட்சி ஆதனங்களின் காப்புறுதிப் பணிகளை ஒழுங்குறுத்துதல்.

அத்துமீறிய நிர்மாணிப்புகளைத் தடுத்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பாக செயலாற்று-தல்.

கூட்டாட்சி ஆதனங்களுக்கு உரித்தான வீதிகள், பூங்காக்கள் போன்ற இடங்களைப் பொருத்தமான வகையில் உள்ளூராட்சி நிறுவனங்களிடம் கையளிக்க நடவடிக்கை மே-ற்கொள்ளல்.

முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தின் வேண்டுகோளின் பிரகாரம் பராமரிப்பு மற்றும் திரு த்த வேலைகளுக்கான சேவைகளை வழங்குதல்.

நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற கூட்டாட்சி ஆதனங்களின் முன்னேற்றத்தை ஒழுங்குறுத்தல்.

மீள்அபிவிருத்தி செய்யப்படவேண்டிய ஆதனங்களை இனங்காணலும் அதனோடு தொடர்புடைய அபிவிருத்தித் திட்டங்களை அரசாங்கத்திடம் சமர்ப்பித்தலும்.

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டாட்சி அபிவிருத்திக் கருத்திட்டங்களை அமுலாக்குதல் அல்லது அமுலாக்கப் பொறுப்பேற்றல்.

நிர்மாணிப்புப் பணிகளை நிறைவுசெய்வதை தவறவிடுகின்ற கூட்டாட்சி ஆதனங்களின் நிர்மாணப்புகளை நிறைவுசெய்யும் பொருட்டு பொறுப்பேற்றல்.



பதிவு செய்யப்பட்ட அலுவலகம்

# ஆண்டறிக்கை

# 2012

## 2012 ஆம் ஆண்டின் அதிகார சபையின் ஒட்டுமொத்த செயற்பாடு

கூட்டாட்சி ஆதனங்களை ஒழுங்குபடுத்துவதற்காக 2003 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கமுடைய சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 1973 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க கூட்டாட்சி முகாமைத்துவ அதிகார சபை சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள ஒழுங்குபடுத்தல் அதிகாரங்களைப் பயன்படுத்தி 2012 ஆம் ஆண்டில் இத்துறைக்கும், சேவைபெறுநருக்கும் வினைத்திறன்மிக்க சேவையை ஆற்றும் வாய்ப்பு அதிகார சபைக்குக் கிடைத்தது. 1982 இன் 45 ஆம் இலக்க மற்றும் 2003 இன் 39 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தியமைக்கப்பட்டவாறான 1973 இன் 11 ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்த சேவைகளை ஆற்ற அதிகார சபை உச்சளவில் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

## மீளாய்வுக்குரிய ஆண்டில் அதிகார சபையின் பிரதான பணிகளாக பின்வருவன இருந்தன,

- கூட்டாட்சி ஆதனங்களின் பொது வசதிகள் மற்றும் பொது அம்சங்கள் தொடர்பில் சான்றிதழ்களை வெளியிடுதல்.
- உரிமை பொறுப்பளிக்கப்பட்ட கூட்டாட்சி ஆதனங்களில் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை தாபித்தல்.
- கூட்டாட்சி ஆதனங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு மத்தியில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்தல்.
- வசிப்பதற்கு பொருத்தமற்ற நிலைமையில் உள்ள வீடமைப்புத் திட்டங்களுக்கான மீண்டும் அபிவிருத்தி செய்யும் திட்டங்களைத் தயார் செய்தல்.
- 2012 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தின் மூலம் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்ட தொடர்மாடி வீடுகளின் பாரியளவிலான புதுப்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வது மற்றும் முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களுக்கு எதிர்கால பாராமரிப்புப் பணிகளை பொறுப்பளித்தல்.
- இதுவரை உரிமையைக் கையளிக்க முடியாதுள்ள அரச துறையின் மற்றும் தனியார் துறையின் ஆதனங்களை ஒழுங்குபடுத்துவதற்காக உரிய நிறுவனங்களுடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- சுனாமி மறுசீரமைப்பின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள கூட்டாட்சி வீடமைப்புத் திட்டங்களின் உரிமையை நீக்குவதற்கான நடவடிக்கைகளுக்காக அவ் ஆதனங்களை இனங்காணல்.
- கூட்டாட்சி ஆதனங்களில் வசிப்பவர்கள் ∴ முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை வழிநடாத்தல்.

## கூட்டாட்சிச் சான்றிதழ்களை வழங்குதல்

தற்காலிக, பகுதியளவான மற்றும் பூரணமான கூட்டாட்சி ஆதனங்களை காணிப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்வதற்காக அவற்றின் பொது அம்சங்கள் மற்றும் பொது வசதிகள் தொடர்பான சான்றிதழை வழங்குவது அதிகார சபையின் பிரதான பணியொன்றாகுமென்பதுடன், அதிகார சபையின் பிரதான வருமான வழியாகவும் இது உள்ளது. .

**கூட்டாட்சிச் சான்றிதழ்களை வழங்குதல் 2005-2012**

| | தற்காலிக கூட்டாட்சிச் சான்றிதழ் | பகுதியளவான கூட்டாட்சிச் சான்றிதழ் | பூரணமான கூட்டாட்சிச் சான்றிதழ் |
|---|---|---|---|
| 2005 | - | - | 12 |
| 2006 | - | 03 | 81 |
| 2007 | 11 | 02 | 92 |
| 2008 | 04 | 03 | 94 |
| 2009 | 05 | 02 | 112 |
| 2010 | 01 | 02 | 62 |
| 2011 | 06 | 06 | 50 |
| 2012 | 05 | 04 | 49 |

2011 ஆம் ஆண்டில் 63 சான்றிதழ்களை வழங்கியதன் மூலம் அதிகார சபையானது 27.7 மில்லியன் ரூபாவை பெற்றதுடன், 2012 ஆம் ஆண்டில் 58 சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் இதன் மூலம் பெற்ற வருமானம் 21.53 மில்லியன் ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளது.

இவ்வாறு வருமானம் வீழ்ச்சியடைவதற்கு முக்கிய காரணமாக இருப்பது கூட்டாட்சிச் சான்றிதழ்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களில் 36 விண்ணப்பங்கள் 10 அலகுகளுக்கும் குறைவான கூட்டாட்சி ஆதனங்களாக உள்ளமையாகும். மேலும் கூட்டாட்சிச் சான்றிதழ்களை பெற்றுக் கொண்டு காணிகளைப் பதிவு செய்கின்ற திணைக்களத்தில் பதிவு செய்ய வேண்டியுள்ள பாரியளவான எண்ணிகைகளுக்கு உள்ளூராட்சி மன்றங்களிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய அமைவுச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை காணப்படுவதும், அதிகார சபையின் வருமானம் வீழ்ச்சியடைவதற்கான காரணமாக உள்ளது. மேலும் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள பாரியளவான ஆதனங்கள் பெருமளவு உள்ள போதிலும், அவை 2012 ஆம் ஆண்டின் இறுதிக்குள் திட்டங்கள் தயார் செய்யப்பட்ட நிலையில் காணப்பட்டன.

## முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களைத் தாபித்தல், பதிவு செய்தல் மற்றும் முனைப்புடன் செயற்படுகின்ற நிலையில் பேணிவருவதற்கு தலையீடு செய்தல்.

2012 ஆம் ஆண்டில் அதிகார சபை 219 முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களைத் தாபிக்க நடவடிக்கை மேற்கொண்டது. அதற்கமைய 2012 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அதிகார சபையின் தலையீட்டுடன் தாபிக்கப்பட்டுள்ள முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களின் எண்ணிக்கை 707 ஆகும். 2012 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களில் 182 அரச துறையினால் நிர்மாணிக்கப்பட்ட கூட்டாட்சி ஆதனங்களில் தாபிக்கப்பட்டுள்ளன. 37 கூட்டுத்தாபனத்தினால் தனியார் துறையினால் நிர்மாணிக்கப்பட்டு உரிமை நீக்கம் செய்யப்பட்டவற்றில் தாபிக்கப்பட்டுள்ளன. மேலும் அமைவுச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ள முடியாது போனமை மற்றும் காணிகளின் சிக்கல்கள் தீர்க்கப்படாமை காரணமாக கூட்டாட்சி வரைபடத்தை பதிவு செய்ய முடியாத மற்றும் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை தாபிக்க முடியாத தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்களில் வசிப்பவர்களுக்கு எதிர்கால முகாமைத்துவக் கூட்டுத்தாபனமொன்றின் பணிகளை பழகிக் கொள்ளக்கூடியவாறு 38 முகாமைத்துவக் குழுக்களைத் தாபிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 2011 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் மகிந்த சிந்தனை எதிர்கால நோக்குக்கு அமைய அரசாங்கம் நிர்மாணித்துள்ள தொடர்மாடி வீடுகளின் பொது வசதிகள் மற்றும் பொது அம்சங்களை 03 வருடங்களில் புதுப்பித்து முடிப்பதற்காக 1000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், 2012 ஆம் ஆண்டில் இந்த புதுப்பித்தல்களுக்காக நிதி ஈடுபடுத்தப்பட்டதன் காரணமாக முகாமைத்துக் கூட்டுத்தாபனங்களை தாபிக்கும் போது வசிப்பாளர்களின் அதிக பங்களிப்பைப் பெற்றுக் கொள்ள முடிந்தது..

எவ்வாறாயினும், முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை தாபிக்கும் போது 2012 ஆம் ஆண்டில் பின்வரும் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது.

- ஆதனங்களின் பொது அம்சங்களின் பராமரிப்புக்கான முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தின் முக்கியத்துவம் பற்றிய புரிந்துணர்வு ஆதன உரிமையாளர்களுக்கு இல்லாமை.

- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை போன்ற அரச நிறுவனங்களினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள தொடர்மாடி வீட்டுத் திட்டங்களில் வசிப்பவர்கள் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை தாபித்தல் தொடர்பில் ஊக்கம் கொள்ளாமை.

- தனியார் நிறுவனங்களினால் நிர்மாணிக்கப்படுகின்ற பெரும்பாலான ஆதனங்களில் அதன் உரிமையாளர்கள் நிரந்தரமாக வசிக்காமை.

- இவற்றில் வசிப்பவர்கள் அதிக வேலைப்பளு காரணமாக அல்லது தொண்டர் அடிப்படையில் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளில் பங்கேற்பது தொடர்பாக வெளிப்படுத்தும் அசமந்தப் போக்கு.

- பராமரிப்புத் தொகைகளைச் செலுத்தத் தவறுதல் மற்றும் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள் குழுவுக்கு ஏனைய வசிப்பவர்கள் ஒத்துழைப்பு வழங்காமை.

அவ்வாறாயினும், அதிகார சபையின் பதவியணியினர் சகல வார இறுதி நாட்களிலும் கூட்டாட்சி ஆதனங்களின் உரிமையாளர்கள் ∴ வசிப்பாளர்களை அறிவுறுத்தி ஆண்டு முழுவதும் இந்தப் பணிக்காக பெரும் முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

## முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களைத் தாபித்தல்

| ஆண்டு | இலக்கு | முன்யேனற்றம் |
|---|---|---|
| 2005 | 75 | 64 |
| 2006 | 195 | 24 |
| 2007 | 100 | 50 |
| 2008 | 120 | 63 |
| 2009 | 120 | 49 |
| 2010 | 120 | 54 |
| 2011 | 130 | 184 |
| 2012 | 250 | 219 |
| மொத்தம் | 1110 | 707 |

## கூட்டாட்சி ஆதனங்களின் பிணக்குகளைத் தீர்த்துவைத்தல்.

கூட்டாட்சி ஆதனத்தின் முகாமைத்துவம் மற்றும் கூட்டுத்தாபன உரிமையாளர்கள், உரிமையாளர் அல்லது வசிப்பவர்களிடையே, உரிமையாளர் அல்லது கொள்வனவு செய்தவரிடையே, ஏற்படுகின்ற பிணக்குகளைத் தீர்ப்பதற்காக தலையிட்டு நடவடிக்கை மேற்கொள்வதற்கு அதிகார சபைக்கு தத்துவமளிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய தற்போது அவ்வாறான பிணக்குகளை தீர்ப்பதற்கான விசாரணைச் சபையொன்று தாபிக்கப்பட்டுள்ளது. மேற்படி விசாரணைச் சபையிடம் 2012 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளின் தன்மைக்கு அமைய பின்வருமாறு அவற்றை வகைப்படுத்த முடியும்.

- கட்டடத்தை நிர்மாணித்து, சந்தைப்படுத்தல் உடன்படிக்கை மூலம் விற்பனை செய்து 5 வருடங்களுக்கும் அதிக காலம் கடந்துள்ள போதிலும், கூட்டாட்சி நில வரைபடத்தை பதிவு செய்து கொள்ள முடியாதுள்ள வசிப்பாளர்களுக்கு உறுதிகள் வழங்கப்படாமை.

- அங்கீகரிக்கப்பட்ட கட்டட வரைபடத்திற்கு முரணான நிர்மாணிப்புகள். சில ஆதன அபிவிருத்தியாளர்கள் குறித்த சில மாடிகளுக்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் மேலும் பல மாடிகளை நிர்மாணித்து விற்பனை செய்வதன் காரணமாக அமைவுச் சான்றிதழை பெற்றுக் கொள்ள முடியாமை.

- பொது வசதிகள் மற்றும் பொது அம்சங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்திற்கு இசைவானதாக பெற்றுக் கொடுக்கப்படாமை.

- வசிப்பவர்கள் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கு மாதாந்த பராமரிப்புத் தொகைகளை செலுத்தாமை.

- தமது வீட்டைப் பயன்படுத்தும் போது ஏனையவர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துகின்றதாக கிடைத்துள்ள முறைப்பாடுகள்.

- சட்ட விரோத நிர்மாணிப்புகளை மேற்கொள்ளல்.

2012 ஆம் ஆண்டில் இவ்வாறான 100 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் அதிகார சபைக்கு கிடைத்துள்ளன. இவற்றில் 87 முறைப்பாடுகளுக்கு 2012 ஆம் ஆண்டில் அதிகார சபை தீர்வுகளை வழங்கியுள்ளதுடன், மேலும் சில முறைப்பாடுகள் பற்றிய விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. மேற்படி நடவடிக்கையின் ஊடாக கூட்டாட்சி முகாமைத்துவ அதிகார சபையானது கடந்த ஆண்டுக்குள் அதிகார சபையை தாபிப்பதற்குக் காரணமான குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு சிறந்த முறையில் பங்களிப்புச் செய்துள்ளதைக் குறிப்பிட முடியும். முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கான புதியதொரு முறையை அறிமுகம் செய்ததன் மூலம் அச்செயற்பாட்டை விரைவுபடுத்தவும் 2012 ஆம் ஆண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## தொடர் மாடி வீட்டுத் திட்டங்களில் பொது அம்சங்களை புதுப்பித்தல்

2011 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் சர்பன்ரையின் தொடர் மாடி வீட்டுத்திட்டத்தில் வசிப்பவர்கள் செய்து கொள்ள முடியாதுள்ள புதுப்பித்தல்களுக்கென 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. 2011 மே மாதமளவில் அதன் மறுசீரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் டிசம்பர் மாதத்தில் அப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு வசிப்பவர்களிடம் கையளிக்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டிலும் இவ்வாறான 07 வீடமைப்புத் திட்டங்களின் மறுசீரமைப்புப் பணிகளுக்காக 109.2 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன், ஆண்டினுள் திறைசேரியினால் வழங்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமைய 55.5 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க வேலைகளை நிறைவு செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தெஹிவளை தேசிய வீடமைப்புத் திட்டம் மற்றும் கந்தவத்தை வீடமைப்புத் திட்டத்தின் வேலைகளை நிறைவு செய்து முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களிடம் எதிர்கால பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக பொறுப்பளிக்கப்பட்டன. போலமேசவத்தை விடமைப்புத் திட்டத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகள் 2012 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட்டதுடன், முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திடம் பொறுப்பளிப்பது 2013 ஜனவரி மாதத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கமைய 2012 ஆம் ஆண்டில் பின்வரும் வீடமைப்புத் திட்டங்களின் மறுசீரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

| வீடமைப்புத் திட்டம் | பயனாளிக-ளான குடும்பங்களின் எண்ணிக்கை | 2012 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மே-ற்கொள்ளப்பட்டுள்ள வேலைகளின் பெறுமதி |
|---|---|---|
| தெஹிவளை வீ. தி.. | 54 | 6.53 |
| கந்தவத்தை வீ. தி.. | 34 | 7.17 |
| போலமேசவத்தை வீ. தி.. | 146 | 18.13 |
| கம்கருபுர வீ. தி.. | 240 | 8.82 |
| டயஸ் பிளேஸ் கட்டம் 1 வீ.தி. | 30 | 2.10 |
| புதுக்கடை வீ. தி. | 95 | 5.95 |
| திசாநாயக்கவத்தை வீ. தி. | 72 | 7.43 |
| மொத்தம | 671 | 56.13 |

## பதிவு செய்யப்படாதுள்ள கூட்டாட்சி ஆதனங்கள்

தனியார் துறையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒரு சில கூட்டாட்சி ஆதனங்கள் மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் ஆரம்ப காலத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஆதனங்கள் பெருமளவானவை இதுவரை பதிவு செய்யப்படாதுள்ளதாக அதிகார சபை இனங்கண்டுள்ளது. இவை 150 இற்கும் அதிகமாகும் என்பதுடன், இவற்றைக் கொள்வனவு செய்துள்ளவர்கள் இவற்றில் தற்போது வசித்து வருகின்ற போதிலும், உரிமைகளைக் கையளிக்கின்ற பணிகள் இடம்பெறாமை தொடர்பான சிக்கல் பற்றி உரிய நிறுவனங்கள் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையை அறிவுறுத்துவற்கு அதிகார சபையின் பணிப்பாளர் சபை 2012 ஆம் ஆண்டு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதன் விளைவாக குறித்த நிறுவனங்களை இந்தச் சிக்கலைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு அதிகார சபைக்கு முடிந்துள்ளது.

## கூட்டாட்சி ஆதனங்கள் தொடர்பாக அறிவுறுத்தல்

கூட்டாட்சி ஆதனச் சட்டம் தொடர்பாக அவ்ஆதனங்களில் வசிப்பவர்களின் அறிவை வளர்த்தல், கருத்துக்களை மாற்றியமைத்தல் மற்றும் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை வலுவூட்டுவதற்காக ஆண்டு முழுவதும் அதிகார சபையின் அலுவலர்கள் பல்வேறு வேலைத்திட்டங்களில் பங்கேற்றனர்.

அதற்கமைய,

- மும்மாதங்களுக்கு ஒருமுறை “சஹாதிபத்ய“ சஞ்சிகையை வெளியிடுவதும், விநியோகிப்பதும் 2012 ஆம் ஆண்டு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதுடன், 03 இதழ்கள் வெளியிடப்பட்டதுடன் இதன் கீழ் ஆண்டு முழுவதும் 45000 பிரதிகள் அச்சிடப்பட்டன.
- முகாமைத்துவக் கூட்டுத்தாபனத் தலைவர்களை அறிவுறுத்தும் செயலமர்வொன்று 2012 அக்டோபர் மாதம் உலக குடியிருப்புத் தினத்தை முன்னிட்டு கொழும்பு நகர சபை மண்டபத்தில் நடாத்தப்பட்டதுடன், இதில் முகாமைத்துவக் குழுக்களின் அங்கத்தவர்கள் 500 பேர் பங்கேற்றார்கள்.
- உலக குடியிருப்புத் தினத்தை முன்னிட்டு கொழும்பு மற்றும் சூழவுள்ள நகர்ப்புறப் பிரதேசங்களைச் சேர்ந்த 08 பாடசாலைகளின் உயர் தரங்களைச் சேர்ந்த மாணவர்கள் சுமார் 8000 பேர் கூட்டாட்சி ஆதனங்களில் வசிப்பது மற்றும் பராமரிப்புச் செய்வது தொடர்பாக

  அறிவுறுத்தப்பட்டார்கள்.

## சுனாமி மறுசீரமைப்பின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கூட்டாட்சி ஆதனங்களை இனங்காணல்.

2004 ஆம் ஆண்டு சுனாமி மறுசீரமைப்பின் கீழ் 19838 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டதுடன், இவற்றில் கூட்டாட்சி இரட்டை வீடமைப்புத் திட்டங்கள் 30 நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், இந்த வீடுகளின் எண்ணிக்கை 2064 ஆகும். கூட்டாட்சித் தொடர்மாடி வீடமைப்புத் திட்டங்கள் 39 நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், வீடுகளின் எண்ணிக்கை 3749 ஆகுமென அதிகார சபை 2012 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது இனங்காணப்பட்டுள்ளது. இந்த வீடமைப்புத் திட்டங்கள் கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, திருகோணமலை, அம்பாரை, மட்டக்களப்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் பரந்துள்ளதாகவும் இனங்காணப்பட்டது. இந்தக் கூட்டாட்சி வீடுகள் 5813 இற்குமான உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பது இது வரை இடம்பெறவில்லை என்பதனால், அவற்றின் பொது அம்சங்களின் பராமரிப்பு தொடர்பான பொறுப்பு சிக்கலானதாக உள்ளதென்பதும் இந்த ஆய்வின் போது இனங்காணப்பட்டது. இந்த ஆய்வின் பெறுபேறாக 2013 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட யோசனைகளின் போது உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான கொள்கை தொடர்பாக அரசாங்கத்தின் கவனத்தை ஈர்ப்பதற்கான வாய்ப்பும் அதிகார சபைக்குக் கிடைத்துள்ளது.

## சட்டங்களைத் திருத்தியமைக்கும் பணிகள்

1973 இன் 10 ஆம் இலக்க கூட்டாட்சி முகாமைத்துவ அதிகார சபை சட்டத்தைத் திருத்தியமைப்பதற்காக அமைச்சரவையின் ஆலோசனைக்கு அமைய நியமனம் செய்யப்பட்ட கல்விமான்கள் குழு 2012 ஆம் ஆண்டில் குழுக் கூட்டங்களை நடாத்தி இறுதி வரைவை அமைச்சரவைக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொண்டது. 2012 ஆம் ஆண்டின் இறுதியில் மேற்படி வரைவு அமைச்சரவையினால் அரசியலமைப்பு தொடர்பான அமைச்சரவையின் துணைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## வேறு வருமானங்களை உழைத்தல்

அதிகார சபையின் வருமானம் குறைவடைகின்ற போக்கு தொடர்பில் எப்பொழுதும் கவனம் செலுத்தி வந்துள்ள அதிகார சபை, பின்வரும் பணிகளிலும் ஈடுபட்டு மாற்று வருமானங்களை உழைத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

1 .கம்பஹா, நீர்கொழும்பு, தேசிய வைத்தியசாலைகளின் மலசல கழிவு சுத்திகரிப்பு நிலையங்களை பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல் நடவடிக்கைகள்.

2. மாதிவெல பாராளுமன்ற உறுப்பினர்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தல தொகுதியின் பராமரிப்புப் பணிகள்.

3. எல்பிற்றிவல தொடர்மாடி வீட்டுத்திட்டத்தின் பம்பி நிலையத்தின் பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும்,

4. உள்ளூராட்சித் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கருத்திட்டங்களின் ஒப்பந்த நடவடிக்கைகள்

இந்த மாற்று மூலங்களிலிருந்து 2012 ஆம் ஆண்டில் 8.0 மில்லியன் ரூபாவை அதிகார சபை வருமானமாக உழைத்துள்ளது.

## அதிகார சபையின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள்

2012 ஆம் ஆண்டு அதிகார சபையின் ஊழியர்களுக்கு சம்பளம் செலுத்துவதற்காக 39.5 மில்லியன் ரூபா ஆன ஏற்பாடுகள் திறைசேரியினால் பெற்றுக் கொடுக்கப்பட்டது. அதிகார சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் 41.5 மில்லியன் ரூபா ஆன புரள்வைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பும் அதிகார சபைக்குக் கிடைத்தது. 2011 ஆம் ஆண்டின் ஒட்டு மொத்த புரள்வான 44.7 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடும் போது 7.1% ஆன வீழ்ச்சியாகும். 2011 ஆம் ஆண்டுக்கான அதிகார சபையின் ஒட்டு மொத்த செலவினம் 63.6 மில்லியன் ரூபா ஆகுமென்பதுடன், இது 2012 இல் 71.6 மில்லியன் ரூபாவாகும். சம்பளம் செலுத்துவதற்காக மேற்படி திறைசேரியின் ஏற்பாடுகள் கிடைத்ததன் காரணமாக இறுதியில் 8.96 மில்லியன் ரூபாவான மிகையைப் பெற்றுக் கொள்ள அதிகார சபைக்கு முடிந்தது. மூலதன இலாபங்களுடன் கவனத்தில் கொள்ளும் போது 16.0 மில்லியன் ரூபாவான வருமான மிகையை உழைப்பதற்கு 2012 ஆம் ஆண்டில் அதிகார சபைக்கு முடிந்துள்ளது.

## கூட்டுத்திட்டம் 2012 – 2016<br>செயல் ரீதியான திட்டம் - 2012

அதிகார சபையினால் 2012 – 2016 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான கூட்டுத்திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளதுடன், இதனை அடிப்படையாகக் கொண்டு 2013 ஆம் ஆண்டுக்கான செயல்ரீதியான திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை இலக்காகக் கொண்டு 2012 ஆம் ஆண்டின் ஒட்டு மொத்த செயற்பாட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

## பணிப்பாளர் சபையின் கூட்டங்களும், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டங்களும்

2012 ஆம் ஆண்டில் அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் கூட்டங்கள் 07 நடாத்தப்பட்டுள்ளதுடன், துறைசார் முக்கியத்துவமிக்க பணிப்பாளர் சபைப் பத்திரங்கள் பல தொடர்பாக தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 07 நடாத்தப்பட்டதுடன், விசேட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் 02 நடாத்தப்பட்டன.

## பதவியணியினர் தொடர்பான மறுசீரமைப்புக்கள்

2010 ஆம் ஆண்டில் அதிகார சபையின் பதவியணியினர் மதிப்பீடு மற்றும் பதவி உயர்வுகள், ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறைகள் என்பன முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டன. அதற்கமைய 2011 ஆம் ஆண்டில் பதவியணி மதிப்பீட்டின் வெற்றிடங்களுக்கு அமைய பதவி உயர்வுகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும் அத்தியாவசிய பதவிகளுக்குத் தேவையான பதவியணியினரும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார்கள். 2011 ஆம் ஆண்டின் இறுதியில் பதவியணியினரின் எண்ணிக்கை 110 ஆக இருந்ததுடன், 2012 டிசம்பர் மாதமளவில் இந்நிலைமையில் எவ்வித மாற்றமுமின்றி காணப்பட்டதுடன், தற்போது காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் 2013 இல் மேற்கொள்ளப்படும்.

அதிகார சபையின் 2012 ஆம் ஆண்டின் செயலாற்றுகைக்குப் பங்களிப்பு வழங்கிய பதவியணியின் சகல ஊழியர்களுக்கும், அதிகார சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரசாங்க மற்றும் நியாயாதிக்க சபைகளின் தலைவர்களுக்கும் பணிப்பாளர் சபையின் சகல உறுப்பினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள இதனை வாய்ப்பாகக் கொள்கின்றேன். மேலும் அதிகார சபையின் பயணப் பாதையை நிலையானதாக மாற்றிக் கொள்வற்கு அறிவுரை வழங்கி எமக்கு ஊக்கமூட்டிய நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சர் அவர்களுக்கும், பிரதியமைச்சர் அவர்களுக்கும், பணிப்பாளர் சபையின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் அமைச்சின் செயலாளர் மற்றும் மேலதிகச் செயலாளர்கள் உள்ளிட்ட பதவியணியினருக்கும், அதிகார சபையின் நடவடிக்கைகளுக்கு வழங்கிய ஒத்துழைப்பு தொடர்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தவிசாளர்

2013.02.28

# ஆண்டின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை

அரசாங்க தொழில் முயற்சிகளின் நல்லாட்சி பற்றிய வழிகாட்டல் தொகுப்பின் 6.3.1 பிரிவின் அறிவுரைகளுக்கு அமைய வருடாந்த அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2012 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை

அரசாங்க தொழில்முயற்சிகளின் நல்லாட்சி தொடர்பான வழிகாட்டல் தொகுப்பின் 6.3.1 பிரிவின் அறிவுரைகளுக்கு அமைய ஆண்டறிக்கையுடன், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.
<u>கூட்டாட்சி முகாமைத்துவ அதிகார சபை</u>

## 2012 ஆம் ஆண்டின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை

| |
|---|
| **தவிசாளர்** |
| திருமதி சாந்தனீ விஜயவர்த்தன<br>பிரதிப் பணிப்பாளர்,<br>அரசாங்க நிதிக் கொள்கைத் திணைக்களம்,<br>பொதுத் திறைசேரி |
| **அங்கத்தவர்** |
| திரு கே.பி.வீ. தம்மிக்க நாமல் முதுகல<br>மாநகர ஆணையாளர்<br>தெஹிவளை – கல்கிசை மாநகர சபை |
| பிரிகேடியர் ஏ.எல்.எஸ்.எம். பேரேரா (2012 யூலை முதல் 2012 டிசம்பர் வரை)<br>பொது முகாமையாளர்<br>தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை |
| பிரிகேடியர் மகிந்த முதலிகே<br>(2012 யூலை முதல் 2012 டிசம்பர் வரை)<br>பொது முகாமையாளர்<br>தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை |
| **அவதானிப்பாளர்** |
| திரு ஐ.கே.கே.எஸ். எதிரிசிங்க<br>கணக்காய்வு அத்தியட்சகர்<br>கணக்காய்வாளர் திணைக்களம் |
| **மாற்று அங்கத்தவர்** |
| திருமதி சாந்தா பி. லியனகே<br>மாநகர ஆணையாளர்<br>ஸ்ரீ ஜெயவர்த்தனபுர – கோட்டே மாநகர சபை |
| அதிகார சபையிலிருந்து விசேடமாக அழைக்கப்பட்ட அலுவலர்களாக பின்வரும் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள். |

| |
|---|
| 1. சட்டத்தரணி திரு கபில கமகே<br>தவிசாளர் |
| 2. திரு ஜி.யு. உபவங்ச<br>பொது முகாமையாளர் / பணிப்பாளர் சபைச் செயலாளர் |
| 3. கே.எச்.ஏ. உபாலி<br>பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) |
| 4. செல்வி சமிலா நிலுசி பெம்மடு<br>உள்ளகக் கணக்காய்வாளர் |

2012 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் 09 கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

பின்வரும் விடயங்கள் தொடர்பாக கணக்காய்வு மற்றும்முகாமைத்துவக் குழுவின் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

- 1973 இன் 10 ஆம் இலக்க (திருத்த) கூட்டாட்சி முகாமைத்துவ அதிகார சபை சட்டத்தை, கூட்டாட்சித் துறையில் இன்று காணப்படுகின்ற சிக்கல்களைத் தீர்த்து வைக்கக்கூடியவாறு திருத்தியமைப்பதற்காக 2011 ஆம் ஆண்டு தயார் செய்யப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனம் அங்கீகரிக்கப்பட்டு சட்டவரைவைத் தயார் செய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுனர் குழுவினால் தயார் செய்யப்பட்ட அறிக்கை பற்றியும் ஆராயப்பட்டது.
- 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த,
  - ✓ தெஹிவளை தேசிய வீடமைப்புத் திட்டம்
  - ✓ கந்தவத்தை தேசிய வீடமைப்பு திட்டம்
  - ✓ கொழும்பு 12 டயஸ் பிளேஸ், கட்டம் 1 தேசிய வீடமைப்புத் திட்டம்
  - ✓ கொழும்பு 12 புதுக்கடை தேசிய வீடமைப்புத் திட்டம்
  - ✓ திசாநாயக்கவத்தை தேசிய வீடமைப்புத் திட்டம்
  - ✓ கம்கருபுர தேசிய வீடமைப்புத் திட்டம்

  ஆகிய வீடமைப்புத் திட்டங்களின் புனரமைப்புப் பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக தொடர்ந்து கண்காணிப்புச் செய்யப்பட்டது.

- 2005, 2006,2007,2008,2009 ஆகிய ஆண்டுகள் தொடர்பாக அரசாங்க தொழில்முயற்சிகள் பற்றிய குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வு அறிக்கைகள் பற்றி ஆராய்ந்து அதற்குத் தேவையான தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தல்.

- அதிகார சபையின் ஐயக் கடன் மற்றும் அறவிட முடியாக் கடன் கொள்கைகளைத் திருத்தியமைக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- நீண்டகாலமாகக் காணப்பட்டு வருகின்ற கணக்கு மீதிகளை புத்தகங்களிலிருந்து பதிவழிப்புச் செய்வது தொடர்பாக தேவையான சிபாரிசுகளைப் பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பித்தல்.

- அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாக ஆராய்வதும், அறிவுரை வழங்குவதும்.

- 2012 வரவு செலவுத்திட்டத்திற்குத் தேவையான சிபாரிசுகளைப் பெற்றுக் கொடுப்பதும் மற்றும் 2012 வருடாந்த செயல்ரீதியான திட்டத்தைத் தயார் செய்யத் தேவையான அறிவுரைகளைப் பெற்றுக் கொடுப்பதும்.

- அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் சிபாரிசின் அடிப்படையில் அதிகார சபையின் கூட்டுத்திட்டத்தை 2012 – 2016 ஆண்டுகளுக்காக இற்றைப்படுத்தித் தயார் செய்தல்.

- கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டு 80 வருடங்களுக்கும் அதிக காலம் பழைமைவாய்ந்த கொழும்பு 14 பிரின்ஸ் ஒவ் வேல்ஸ் வீடமைப்புத் திட்டமானது அபாயகரமான நிலையில் உள்ளதனால் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகார சபை சட்டத்தின் 5 ஏ பிரிவுக்கு அமைய மீண்டும் அபிவிருத்தி செய்வதற்கான திட்டத்தைத் தயார் செய்வதற்கு அமைச்சரவையின் கவனத்தைக் கோரல்.

- மேலும் பின்வரும் விடயங்கள் தொடர்பாக கணக்காய்வு மற்றும் முகாமைத்தவக் குழு தொடர்ச்சியாக கண்காணிப்புக்களை மேற்கொண்டு வந்துள்ளது.

✓ வரவு செலவுத்திட்ட வித்தியாசங்கள் பற்றிய அறிக்கை

✓ நிதிசார் செயற்பாடுகள் பற்றிய அறிக்கை

✓ காசுப் பாய்ச்சல் மற்றும் திரவத்தன்மை

✓ வங்கி இணக்கக்கூற்று அறிக்கைகள்

✓ மனித வள முகாமைத்துவம் பற்றிய அறிக்கை

- வரவு செலவுத்திட்டத்தின் இலக்குகளை அடைந்து கொள்வது தொடர்பாக தொடர்ச்சியான மீளாய்வுகளை மேற்கொள்ளல்.

கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

# இல் நிதிக்கூற்று

# 2012

2012 திசெம்பர் 31
இல் நிதிக்கூற்று
(ஐந்தொகை)

## கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை
### 2012 திசெம்பர் 31 இல் நிதிக்கூற்று (ஐந்தொகை)

| 2011 ரூபா | சொத்துக்கள் | | | | 2012 ரூபா |
|---|---|---|---|---|---|
| | நடைமுறையல்லாச் சொத்துக்கள் | | | | |
| | நிலையான சொத்துக்கள் | | | | |
| 9,656,419 | நிலையான சொத்துக்கள் | குறிப்பு | 01 | | 26,778,214.78 |
| | முதலீடு | | | | |
| | நீண்டகால முதலீடுகள் | | | | |
| 3,000,000 | வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் பங்குகள் | | | | 3,000,000.00 |
| 12,656,419 | | | | | 29,778,214.78 |
| | நடைமுறைச் சொத்துக்கள் | | | | |
| 470,505 | கையிருப்பு | குறிப்பு | 02 | 544,212.62 | |
| 23,233,232 | வர்த்தக கடன்படுநர், ஊழியர் கடன் மற்றும் வருமதியான மீதிகள் | குறிப்பு | 03 | 22173,854.86 | |
| 127,502 | பிற வருமதியான மீதிகள் | குறிப்பு | 04 | 800,156.36 | |
| 98,018 | எதிர்காலத் திற்காக செலுத்தியவை | குறிப்பு | 05 | 118,668.00 | |
| 10,497,670 | குறுங்கால முதலீடுகள் | குறிப்பு | 06 | 44,342,989.85 | |
| 7,015,003 | காசு மற்றும் நிதிசார் வகையினங்கள் | குறிப்பு | 07 | 1,628,873.59 | |
| 41,441,930 | | | | | 69,608,755.28 |
| 54,098,349 | மொத்தச் சொத்துக்கள் | | | | 99,386,970.06 |
| | பொறுப்புக்கள் | | | | |
| | நடைமுறைப் பொறுப்புக்கள் | | | | |
| | இலங்கை வங்கி குத்தகைக் கடன் | குறிப்பு | 08 | 2,796,428.52 | |
| 14,421,809 | செலுத்த வேண்டியவை | குறிப்பு | 09 | 31,220,939.07 | |
| 1,675,327 | அட்டுறு செலவினங்கள் | | | 1,678,934.72 | |
| 42,153,042 | கடன்கொடுநர்கள் கூ முற்பணம் | குறிப்பு | 10 | 43,382,749.05 | |
| 27,642,455 | ஏற்பாடுகள் | குறிப்பு | 11 | 26,542,287.12 | 105,621,338.48 |
| 85,892,633 | மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள் | | | | 105,621,338.48 |
| | நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | | | | |
| | குத்தகை வட்டி | குறிப்பு | 08 | | 9,554,464.36 |
| 85,982,633 | மொத்தப் பொறுப்புக்கள் | | | | 115,175,802.84 |
| 31,794,284 | | | | | |
| | தேறிய பொறுப்புக்களின் கூட்டுத்தொகை | | | | 15,788,832.78 |
| | தேறிய சொத்துக்கள், பிரதிநிதித்துவப் படுத்தப்படுவது | | | | |
| 500,000 | அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் | | | | 500,000 |
| 500,000 | அரசாங்க மூலதனம் | | | | 500,000.00 |
| 2,500,000 | மிகையூதியப் பங்குகள் | | | | 2,500,000.00 |
| 3,000,000 | | | | | 3,000,000.00 |
| | கூட்டுத் தொகை | | | | |
| (41,763,291) | சேர்ந்த நிதியங்களய | | | | |
| | முந்திய ஆண்டுக்கான சீராக்கல்கள் | | | (60,715,712.63) | |
| (18,952,422) | ஆண்டுக்குள் மிகைநிலை (பற்றாக்குறை) | | | 16,005,451.53 | (44,710,261.10) |
| 22,308,765 | மீள்பெறுமதி கணக்கப்பட்ட ஒதுக்கங்கள் | | | | 22,308,765.04 |
| 1,350,000 | பொது ஒதுக்கம் | | | | 1,350,000.00 |
| 2,262,663 | மூலதன மாற்றல்கள் | | | | 2,262,663.28 |
| (31,794,283) | தேறிய பொறுப்புக்கள் & உரித்துகள் கூட்டுத்தொகை | | | | (15,788,832.78) |

சட்டத்தரணி கபில கமகே
தலைவர்

ஜீ.யூ.உபவங்ச
பொது முகாமையாளர்

கே.எச். ஏ. உபாலி
பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)

## கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை
## 2012 திசெம்பர் 31 இல் நிதிக்கூற்று (ஐந்தொகை)

| 2011 ரூபா | | | 2012 ரூபா |
|---|---|---|---|
| | வருமானம் | | |
| 42,519,125 | தொழிற்பாட்டு வருமானம் | குறிப்பு 12 | 38,192,179 |
| 1,849,100 | பிற தொழிற்பாட்டு வருமானம் | குறிப்பு 13 | 2,050,527 |
| 317,477 | தொழிற்பாடு அல்லாத வருமானம் | குறிப்பு 14 | 1,272,416 |
| 44,685,702 | மொத்த தொழிற்பாட்டு வருமானம் | | 41,515,122 |
| 44,685,702 | சம்பளம் செலுத்துவதற்கான திறைசேரி ஏற்பாடுகளின் பெறுகைகள் | | 39,050,000 |
| | | | 80,565,122 |
| | தொழிற்பாட்டுச் செலவினங்கள் | | |
| 43,264,198 | ஊழியர் சம்பளமும் படிகளும் | குறிப்பு 15 | 49,043,661 |
| 600,038 | பிரயாணச் செலவுகள் | | 788,879 |
| 3,947,284 | வழங்களும் நுகர்வுப் பண்டங்களும் | குறிப்பு 16 | 4,883,606 |
| 4,484,134 | பராமரிப்புச் செலவுகள் | குறிப்பு 17 | 4,748,028 |
| 3,240,426 | நியதிச்சட்ட செலவுகள் | குறிப்பு 18 | 4,225,177 |
| 705,146 | நேரடிச் செலவினங்கள் | குறிப்பு 19 | 1,591,652 |
| 5,322,077 | தேய்மானம் | | 3,537,805 |
| 625,451 | கருத்திட்ட செலவினங்கள் | குறிப்பு 20 | 707,594 |
| 387,915 | பிற தொழிற்பாட்டச் செலவினங்கள் | குறிப்பு 21 | 95,900 |
| 62,567,699 | மொத்த தொழிற்பாட்டுச் செலவினங்கள் | | 69,622,302 |
| | | | 8,957,957 |
| (17,881,697) | மிகை நிலை கூற்றுபற்றாக்குறை | | 10,942,820 |
| 888,350 | நிதிசார் செலவினங்கள் | குறிப்பு 22 | 1,431,705 |
| 182,105 | தொழிற்பாடு அல்லாத செலவினங்கள் | குறிப்பு 23 | 553,158 |
| 1,070,455 | முலதன சொத்துக்கள் விற்பனையிலான மிகைநிலை | | 1,984,863 |
| | மிகை நிலை கூற்றுபற்றாக்குறை | குறிப்பு 24 | 7,047,495 |
| (18,952,422) | வரி கழிக்க முன் தேறிய மிகைநிலை & பற்றா-க்குறை | | 16,005,452 |
| | வருமான வரிக்கான ஏற்பாடுகள் | | |
| (18,952,422) | தேறிய மிகைநிலை & பற்றாக்குறை | | 16,005,452 |
| மாதிவெல பாராளுமன்ற செயலாளர் அலுவலகம் (ரூபா) | |
|---|---|
| 2012 ஒக்டோபர் | 267,828.80 |
| 2012 நவம்பர் | 253,351.32 |
| 2012 டிசெம்பர் | 256,047.88 |
| பேரேட்டுக் கணக்குகளின் மீதி நிலுவைகளின் உறுதிப்படுத்தல்களுக்கு அமைய | 777,228.00 |
| இணங்கியுள்ள பெறுமதி | 778,196.67 |
| வித்தியாசம் | 968.67 |

| கணக்காய்வு அறிக்கை | அதிகாரசபையின் பதில் |
|---|---|
| | இந்த பெறுமதி 2012 நவம்பர் பட்டியல் திருத்தப்பட்டதன் காரணமாக ஏற்பட்டுள்ளது. அதற்கமைய நவம்பர் மாதத்திற்கு அதிகார சபையினால் அனுப்பப்பட்டுள்ள பட்டியல்களின் பெறுமதி ரூபா 253,351.32 ஆக அனுப்பப்பட்டுள்ள போதிலும் திருத்திய பட்டியல் பெறுமதி ரூபா 254,319.99 ஆக இருத்தல் வேண்டும்.<br><br>அதற்கமைய ரூபா 968.67ஆன வித்தியாசம் ஜே/124 மூலம் 2013ஆம் ஆண்டில் சீராக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 2.2.4 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்கி ஒழுகாமை

| | | |
|---|---|---|
| பின்வரும் இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்பட்டுள்ளன. | | |
| சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்கி ஒழுகாமை<br><br>(அ) தாபன விதிக் கோவை | | |
| (i) அத்தியாயம் II இன் 13.3 ஆம் பிரிவு | வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்புக்கள் செய்யாது அலுவலர்கள் 2 பேர் 3 மாதங்கள் முதல் 14 மாதங்கள் வரையான அங்கீகாரமின்றி பதில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் மிளாய்வு ஆண்டில் சம்பளமாக ரூபா 102,560 செலுத்தப்பட்டிருந்தது. | (அ) அதிகார சபையின் நிதி நிலைமை சீரடையும் போது இந்த பதவிகளுக்கு புதிய ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்து கொள்ளும் வரை நிறுவனத் தலைவரினால் உதவிப் பொது முகாமையாளர் (நிதி) பதவி, உதவிப் பொது முகாமையாளர் (நடவடிக்கை மற்றும் பராமரிப்பு) ஆகிய பதவிகளுக்கு கடமைகளை நிறைவேற்றுவதற்காக அலுவலர்கள் 2 பேர் நியமிக்கப்பட்டார்கள். மேற்படி அலுவலர்கள் தொடர்ந்தும் அந்த பணிகளை நிறைவேற்றுவதற்காக 2013 ஜூன் மாதம் 20ஆந் நடைபெற்ற 89வது பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. |
| அதிகார சபையின் நிதி நிலைமைகள் சீரடையும் போது இந்த பதவிகளுக்கு புதிய ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்து கொள்ளும் வரை நிறுவன தலைவரினால் கடமைகளை நிறைவேற்றுவதன் அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட அலுவலர்கள் தொடர்ந்தும் அந்த பணிகளை நிறைவேற்றுவதற்காக நீடிப்பதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக பொது முகாமையாளர் எனக்கு அறியத்தந்துள்ளார். | | |
| (ii) அத்தியாயம் XIV இன் 3 மற்றும் 4ஆம் பந்திகள் | ஒரு அலுவலர் தமது கடமை நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக பயணங்களை மேற்கொள்ளும் போது அரசாங்கத்திற்கு ஆகக்குறைந்த செலவினங்கள் ஏற்படும் வகையில் செயற்பட்டு தங்குமிடங்களையும் ஏனைய கொடுப்பனவுகளையும் இணைந்த கொடுப்பனவுகளையும் பெற்றுக்கொள்ள செயற்பட வேண்டுமாயினும் அதற்கு முரணாக அதிகார சபையின் அலுவலர்கள் சிலருக்கு ஹோட்டல் பட்டியல்களை செலுத்துவதற்காக ரூபா 49இ900 செலுத்தப்பட்டிருந்தது. | (ii) இணைந்த கொடுப்பனவை செலுத்துவதன் மூலம் மாத்திரம் அலுவலர்களுக்கு இவ்வாறான பின்தங்கிய மாகாணங்களில் கடமைகளை மேற்கொள்ள விருப்பம் தெரிவிப்பதில்லை என்பதுடன் இதன்போது அதிகார சபை நடைமுறைப் பிரச்சினைகளையும் எதிர்நோக்கும் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் கல்முனை அம்பாறை போன்ற பின்தங்கிய மாகாணங்களில் சுனாமி கூட்டாட்சி ஆதனங்கள் தொடர்பான கடமைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக உணவு மற்றும் தங்குமிட வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு உட்பட்டு அலுவலர்களை ஈடுபடுத்த வேண்டி ஏற்பட்டிருக்கின்றது. இந்த நிலைமையை தடுத்துக் கொள்ளக்கூடிய எல்லா சந்தர்ப்பங்களிலும் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதையும் அறிக்கையிடுகின்றேன். |

| கணக்காய்வு அறிக்கை | | அதிகாரசபையின் பதில் |
|---|---|---|
| (ஆ) 2003 ஜுன் 02ஆந் திகதிய பிஈடி/12ஆம் இலக்க அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை 8.3.4ஆம் பந்தி | வீட்டு தொலைபேசி கொடுப்பனவுகளுக்கு உரிமை இல்லாத பதவிநிலை தரம் அல்லாத அலுவலர்கள் 6 பேரின் தொலைபேசி பட்டியல்களை செலுத்துவதற்கு அதிகாரசபை மீளாய்வு ஆண்டில் ரூபா 42365ஐ செலவிட்டிருந்தது. | (ஆ) இந்த அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட தொலைபேசி கொடுப்பனவை 2013.06.01ஆந் திகதி முதல் நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (இ) நி.பி.756(4) மற்றும் 2004 ஆகஸ்ட் 31ஆந் திகதிய 353 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | அகற்றுவதற்கு பொருத்தமான வாகனங்களை இனங்காண்பதற்காக அமைச்சு செயலாளரினால் தகுதி வாய்ந்த மூவரைக் கொண்ட விசேட குழுவொன்று நியமனம் செய்யப்பட வேண்டும் என்பதுடன் வாகனத்தின் பெறுமதிகளும் அந்த சபையினால் தீர்மானிக்கப்பட வேண்டுமாயினும் ரூபா 7,047,495 பெறுமதிமிக்க 4 வாகனங்களை அகற்றும் போது அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | (இ) அதிகார சபையினால் முன்னர் வாகனங்களை அகற்றும் போது லங்கா ஓட்டோ மொபைல் நிறுவனத்தினால் தொழில்நுட்ப அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்படுவதனால் அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எனினும் இந்த பணியை மேற்கொள்ளும் போது இடம் பெற்றுள்ள பலவீனங்களை எதிர்காலத்தில் சீராக்கிக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

| கணக்காய்வு அறிக்கை | அதிகாரசபையின் பதில் |
|---|---|
| **2.2.5 அதிகாரத்தை மிகைத்து செயற்படுதல்** | |
| பின்வரும் இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்பட்டுள்ளன. | |
| அதிகார சபையினால் வாகனங்களை கொள்வனவு செய்ய வேண்டியதன் அவசியத் தன்மைக்கு அமைய அரசாங்க தொழில் முயற்சி திணைக்களத்தின் 2012 மே 17ஆந் திகதிய கடிதத்தின் மூலம் ஒரு பெற்றோல் கார் மற்றும் 3 டீசல் கெப் வண்டிகளை கொள்வனவு செய்ய அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக 3 பெற்றோல் கார்களும் ஒரு டீசல் கெப் வண்டியும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | வரவு செலவுத் திட்டத்தினால் ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் மற்றும் கிடைத்திருந்த ஏற்பாடுகள் மற்றும் முன்வைக்கப்பட்டிருந்த விலை மனுக்களுடன் ஒப்பிடும் போது 3 கெப் வண்டிகளையும் ஒரு மோட்டார் காரையும் கொள்வனவு செய்தால் வரவு செலவுத்திட்ட வரையறையையும் தாண்டிச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றது. அவ்வாறு இங்கு கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களில் 3 கார்களையும் நிறுவனத்தின் அலுவலர்களுக்கு ஒதுக்குவதற்கும் ஒரு கெப் வண்டியை குழுமத்திற்கு கொள்வனவு செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது.<br><br>மேலும் திறைசேரியின் அரசாங்க திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் 112 மூலம் வழங்கப்பட்டுள்ள எஞ்சின் கொள்ளவு வரையறைகள் கவனத்தில் கொள்ளப்பட்டன. மேலும் மிட்சுபிசி வகையை சேர்ந்த 2 லான்சர் வண்டிகளை கொள்வனவு செய்யுதம் போது (இது நிறுவனத்திற்கு கிடைத்த விசேட சந்தர்ப்பமாகும்) ஒரு வண்டியை பழைய விலையில் கொள்வனவு செய்ய முடிந்தமை விசேட காரணியாகும். எவ்வாறாயினும் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட திருத்தங்களுக்கு திறைசேரியின் அங்கீகாரத்திற்காக 2013.08.29ஆந் திகதிய கடிதம் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |
| **3 நிதிசார் மீளாய்வு** | |
| **3.1 நிதிசார் விளைவு** | |
| கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் செய்யப்பட்டுள்ளன. | |
| சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்கமைய 2012 டிசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான அதிகார சபையின் நடவடிக்கைகளின் பெறுபேறுகள் ரூபா 16,005,452 ஆன மிகையாக உள்ளதுடன் அதனுடன் ஒப்பிடும் போது கடந்த ஆண்டின் குறை ரூபா 18,952,422 ஆக இருப்பதனால் நிதி விளைவு ரூபா 34,957,874னால் வளர்ச்சியடைந்துள்ளது. மீளாய்வு ஆண்டில் சம்பளம் செலுத்துவதற்காக வழங்கப்பட்ட திறைசேரியின் ஏற்பாடுகள் மற்றும் வாகனங்களை விற்பனை செய்ததன் மூலம் பெறப்பட்ட இலாபம் மிகையை அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது. | ஊழியர்களின் சம்பளங்களை செலுத்துவதற்காக திறைசேரியிடம் பெறப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் வாகனங்களை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த இலாபம் தேறிய இலாபமிகையில் தாக்கம் செலுத்தியுள்ளது. |
| **3.2 ஆய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு** | |
| கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் செய்யப்பட்டுள்ளன. | |
| (அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செயற்பாடல்லாத வருமானம் 301 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் 7 நாட்களுக்கான வைப்பு வட்டி வீதம் அதிகரித்திருந்தமை மேற்படி வருமானம் அதிகரிக்க காரணமாகியுள்ளது | (அ) மூலதன கருத்திட்டங்களுக்கு கிடைக்கின்ற திறைசேரி ஏற்பாடுகள் உரிய கருத்திட்ட ஒப்பந்ததாரர்களுக்காக செலுத்தும் வரை 7 வைப்புக் கணக்குகளில் வைப்புச் செய்வதன் மூலம் இந்த வட்டி வருமானம் உழைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. |

| கணக்காய்வு அறிக்கை | அதிகாரசபையின் பதில் |
|---|---|
| (ஆ) அதிகாரசபையின் பிரதான வருமான மூலமான கூட்டாட்சி சான்றிதழ்களை வழங்குகின்றதன் மூலமான வருமானம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது 22 சதவீதத்தால் குறைவடைந்துள்ளது. | (ஆ) வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை தயார் செய்யும் போது ஏற்புடையதாக்கிக் கொள்கின்ற நகர அபிவிருத்தி அதிகார சபை, நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை போன்ற நிறுவனங்களினால் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த கூட்டாட்சி ஆதனங்கள் 2012.12.31ஆந் திகதி வரை நிர்மாணித்து முடித்திருக்காமையினால் கூட்டாட்சி சான்றிதழ்களை பெற்றுக் கொள்வதற்கு கோரிக்கைகள் முன்வைக்கப்படாமை இந்த வருமானம் குறைவடைந்துள்ளமைக்கான காரணமாகும். நிர்மாணிக்கப்பட்ட கூட்டாட்சி ஆதனங்களுக்கு இதுவரை இயைபுச் சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ளாமையினால் கூட்டாட்சி சான்றிதழ்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br><br>இந்த நிலைமையில் உத்தேசிக்கப்பட்ட வருமானத்தை உழைத்துக் கொள்வது கடினமாகியிருக்கின்றது. |
| (இ) மீளாய்வு ஆண்டில் ஈடுபடுத்தப்பட்ட மூலதனத்திற்கு மொத்த தேறிய சொத்துக்கள் விகிதம் (526)ஆக இருந்தது. | (இ) தேறிய சொத்துக்களின் விகிதம் இவ்வாறு கீழ் நோக்கிச் செல்வதற்கு பிரதான காரணமாக இருப்பது 2012.12.31ஆந் திகதிக்கு செலுத்த வேண்டிய ஒப்பந்த கொடுப்பனவுகள் ரூபா மில்லியனக் 11.00 உம் தடுத்து வைக்கப்பட்ட தொகை ரூபா மில்லியன் 3.00 உம் பாதுகாப்பு வைப்பு ரூபா மில்லியன் 1.3னாலும் அதிகரித்துள்ளமையாகும். |

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1.1 செயலாற்றுகை

மீளாய்வு ஆண்டில் அதிகார சபையின் செயலாற்றுகை இலக்குகளுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| விடயம் | இலக்கு | உண்மை | செயல் ரீதியான திட்டத்திற்கு அமைய முன்னேற்றத்தின் விகிதம் |
|---|---|---|---|
| முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களை தாபிப்பதை பதிவு செய்வதும் புதுப்பிப்பதும் | 250 | 219 | 88 |
| கூட்டாட்சி சான்றிதழ்களை வெளியிடல் | 116 | 58 | 50 |

கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| கணக்காய்வு அறிக்கை | அதிகாரசபையின் பதில் |
|---|---|
| (அ) செயல் ரீதியான திட்டத்தின் இலக்குகள் மற்றும் அவற்றை அடைந்து கொள்வதற்கு இடையே குறிப்பிடத்தக்களவு வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டதனால் செயல் ரீதியான திட்டம் அதிகார சபையின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வது தொடர்பாக பயன்மிக்கவாறு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பது சந்தேகத்திற்கு உரியது. மேலும் கூட்டாட்சி ஒழுங்குபடுத்தல், இணக்கம் செய்தல் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் செயல்ரீதியான திட்டத்தின் இலக்குகளாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | (அ) முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களை தாபிப்பது 250 ஆக மதிப்பிடப்பட்ட போது சுனாமி அனர்த்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிர்மாணிக்கப்படுகின்ற கூட்டாட்சி ஆதனங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன.<br><br>எனினும் இந்த ஆண்டில் மேற்படி ஆதனங்களின் கூட்டாட்சி வரைபடத்தை பதிவு செய்வதற்கு காணிகளை அபிவிருத்தி செய்யும் அமைச்சுக்கு முடியாது போனதன் காரணமாக இந்த ஆதனங்களில் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை தாபிக்க முடியவில்லை. இது செயலாற்றுகையின் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தது.<br><br>எவ்வாறாயினும் இதற்கு முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை தாபிப்பது தொடர்பாக உயர்மட்ட செயலாற்றுகை அறிக்கையிடப்பட்டுள்ளது.<br><br>கூட்டாட்சி சான்றிதழ்களை வெளியிடுவதற்காக இலக்குகளை நிர்ணயிக்கும் போது 2011ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட நகர புத்தெழுச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்படவுள்ள 17 வீடமைப்பு கருத்திட்டங்கள் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்படவுள்ள 5 கருத்திட்டங்கள், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்படவுள்ள 5 வீடமைப்பு கருத்திட்டங்கள் மற்றும் தனியார் துறையின் ஆதனங்களில் 70க்கும் அதிகமான எண்ணிக்கைக்கு 2012ஆம் ஆண்டு தற்காலிக கூட்டாட்சி சான்றிதழ் அல்லது பகுதியளவாக கூட்டாட்சி அல்லது பூரணமான கூட்டாட்சி சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கு கோரிக்கை முன்வைக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. |

| கணக்காய்வு அறிக்கை | அதிகாரசபையின் பதில் |
|---|---|
| | எனினும் இந்த அதிகார சபையின் கட்டுப்பாட்டுக்கு அப்பால்பட்ட பல்வேறு காரணங்களினால் மேற்படி நிர்மாணிப்புகளுக்கு சான்றிதழ்களை பெற்றுக்கொள்ள முன்வராமை காரணமாக செயல் ரீதியான திட்டத்தின் இலக்குகளை அடைந்து கொள்வதில் தாக்கம் ஏற்பட்டது.<br><br>இலக்குகளை மீளாய்வு செய்வதற்காக பதவிநிலை அலுவலர் கூட்டங்கள் தொழில் நுட்ப அலுவலர் கூட்டங்க்ள போன்றன நாளாந்தம் நடாத்தப்பட்டு செயலாற்றுகையை மதிப்பீடு செய்யும் நடைமுறையொன்று அதிகார சபையினால் பின்பற்றப்பட்டன. எனினும் ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கும் ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டத்தின் போதும் பணிப்பாளர் சபை கூட்டத்தின் போதும் இந்த நடவடிக்கைகள் பற்றி மதிப்பீடுகள் செய்யப்படுகின்றன. எனினும் அதிகார சபையின் நிதி நிலைமை, தொடர்ச்சியான நிலைத்திருத்தல் தொடர்பில் பிரதானமாக தாக்கம் செலுத்தியிருப்பது செயலாற்றுகை தொடர்பாக முகாமைத்துவத்தின் உரிய கவனம் செலுத்தாமை அல்லது என்பதுடன் கூட்டாட்சி நிர்மாணிப்புத் துறையில் காணப்பட்ட மேலே குறிப்பிடப்பட்ட மோசமான நிலைமையாகும். மேலும் இணக்கம் செய்யப்பட்ட அதாவது மோதல்களை தீர்த்து வைப்பது தொடர்பாகவும் அந்த மோதல்கள் எவ்வளவு ஏற்படும் என்பது பற்றிய இலக்குகளை முன்கூட்டியே மதிப்பிடுவது முடியாத காரியமாகும். |
| (ஆ) கொழும்பு நகரம் மற்றும் கொழும்பு நகரத்திற்கு வெளியே 2005 – 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் 659 முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் தாபிக்கப்பட்டிருந்ததுடன் இவற்றில் 295 மீளாய்வு ஆண்டின் இறுதியில் செயற்படாத நிலையில் காணப்பட்டன. இந்த முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை மீளத்தாபிப்பதற்கு அதிகார சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | (ஆ) செயற்படாதுள்ள முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் தொடர்பான அறிக்கை 2013ஆம் ஆண்டின் முதற் காலாண்டில் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் அவ்வாறான செயற்படாதுள்ள முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் 53 ஐ 2013 மே மாதம் அளவில் மீளத்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த வேலைத்திட்டம் தொடர்ந்தும் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. |

| கணக்காய்வு அறிக்கை | அதிகாரசபையின் பதில் |
|---|---|
| (ஆ) செயற்படாதுள்ள முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் தொடர்பான அறிக்கை 2013ஆம் அண்டின் முதற் காலாண்டில் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் அவ்வாறான செயற்படாதுள்ள முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்கள் 53ஐ 2013 மே மாதம் அளவில் மீளத்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த வேலைத்திட்டம் தொடர்ந்தும் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. | (இ) கொழும்புக்கு வெளியே உள்ள மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் கூட்டாட்சி ஆதனங்களை இனங்காண்பது 2013இன் முதலாவது காலாண்டின் இறுதிக்குள் நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றின் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை தாபிப்பதற்கு 2013ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் கொழும்புக்கு வெளியே கம்பஹ, கண்டி தவிர ஏனைய மாவட்டங்களில் சுனாமி மறுசீரமைப்பு திட்டங்களின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கூட்டாட்சி ஆதனங்களே காணப்படுகின்றன. அந்த ஆதனங்களுக்கான உரிமைகளை பொறுப்பளிக்கும் நடவடிக்கைகள் இதுவரை மேற்கொள்ளப்படாதிருப்பதனால் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை தாபிக்கும் பணியில் இது தாக்கம் செலுத்தியுள்ளது. |
| (ஈ) 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட மொத்த முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களின் எண்ணிக்கை 365 ஆக உள்ள போதிலும் இவற்றில் 216 தொடர்பாக மீளாய்வு ஆண்டின் இறுதி வரை பதிவை புதுப்பிக்கும் கட்டணம் அதிகார சபைக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. | (ஈ) பதிவை புதுப்பிக்கும் போது அரச துறையில் பெரும்பாலான முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களது பதிவை புதுப்பிப்பதற்காக ஊக்கம் செலுத்துவதில்லை.<br><br>இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்வதற்காக அதிகார சபையினால் பல்வேறு முறைமைகளின் ஊடாக அறிவுறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் தற்போது காணப்படுகின்ற சட்டங்களினால் முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களை பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்பதுடன் உத்தேச திருத்தச் சட்டத்தின் மூலம் ஏற்பாடுகளைச் செய்து கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. |
| **4.1.2 நோக்கங்கள் நிறைவேற்றப்படாமை** | |
| அதிகார சபையினைக் கூட்டிணைக்கும் நோக்கங்களில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் 2013 செப்டெம்பர் 30ஆந் திகதி வரையும் நிறைவற்றப்பட்டிருக்கவில்லை. | |
| (அ) 2003ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க பொது வசதிகள் சபை (திருத்த) சட்டத்தின் 5(உ) பிரிவுக்கமைய கூட்டாட்சி முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களை தாபித்ததன் பின்னர் அதன் நடவடிக்கைகளை முகாமைத்ததும் செய்தல் மற்றும் நிர்வகிக்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டுமாயினும் அதிகார சபையினால் வழங்கப்பட்டிருந்த தகவல்களுக்கு அமைய 2005ஆம் ஆண்டு முதல் மீளாய்வு ஆண்டு வரை வெளியிடப்பட்டிருந்த கூட்டாட்சி சான்றிதழ்களின் எண்ணிக்கை 611 ஆகும். அவ்வாறே மேற்படி காலப்பகுதிக்குள் பதிவு செய்ய இலக்காகக் கொள்ளப்பட்ட முகாமைத்துவ கூட்டுத்தாபனங்களின் எண்ணிக்கை 1110 ஆக உள்ள போதிலும் முகாமைத்துவ கூட்டுத்தாபனங்கள் 659 மாத்திரமே பதிவு செய்யப்பட்டிருந்தன. | (அ) வழங்கப்பட்டுள்ள 611 கூட்டாட்சி சான்றிதழ்களில் 316 அதாவது சுமார் 50% க்கும் அதிகமானவை 5 அலகுகளைவிட குறைவான கூட்டாட்சி ஆதனங்களுக்கே வழங்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் அவ்வாறான ஆதனங்கள் குடும்பங்களில் உள்ள அங்கத்தவர்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதனால் மற்றும் பொது வசதிகள் மற்றும் பொது அம்சங்கள் பெரும்பாலும் காணப்படாமையினால் அவற்றில் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை தாபிப்பதற்காக அந்த ஆதனங்களின் உரிமையாளர்கள் ஊக்கம் கொள்வதில்லை. |

| கணக்காய்வு அறிக்கை | அதிகாரசபையின் பதில் |
|---|---|
| (ஆ) மேற்படி சட்டத்தின் 5(எ) பிரிவுக்கு அமைய கூட்டாட்சி ஆதனத்தின் பொது வசதிகளை பராமரிப்பதற்காக உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஆதனங்களை பொறுப்பளிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | (ஆ) சட்டத்தின் (எ) பிரிவுக்கு அமைய உரிமையாளர்களின் அல்லது குடியிருப்பாளர்களின் உபயோகத்திற்காக பிரவேசப்பாதைகள், தோட்டங்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் வேறு திறந்த வெளிகளை பராமரிப்பதற்காக உள்ளூராட்சி மன்றங்களுக்கு பொறுப்பளிப்பது அதிகார சபையின் நோக்கங்களில் ஒன்றாகும். மேலே குறிப்பிடப்பட்ட வசதிகளைக் கொண்டுள்ள வீடமைப்புத் தொகுதிகள் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன. இவற்றில் மெனிங் டவுன் வீடமைப்புத் திட்டம், சொய்சாபுர வீடமைப்புத் திட்டம், அன்ட்ரசன் வீடமைப்புத் திட்டம் ஆகியவற்றில் பிரவேசப் பாதைகள் உள்;ராட்சி மன்றங்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளன.<br><br>மாளிகாவத்தை தொடர்மாடி வீடமைப்புத் தொகுதியின் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் பிரவேசப் பாதைகள், விளையாட்டு மைதானங்கள், சிறுவர் பூங்காக்கள் போன்றவற்றை பொறுப்பளிப்பதற்காக கொழும்பு மாநகர சபையுடன் பல்வேறு கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டிருப்பதுடன் ஏற்பாடுகள் இல்லாமையினால் அவற்றை பொறுப்பேற்பது நிராகரிக்கப்பட்டுள்ளது.<br>ஹோமகம, ஜல்தர அரசாங்க ஊழியர்களுக்கான வீடமைப்புத் திட்டத்தில் இவ்வாறான வசதிகளை பராமரிப்பதற்கு ஹோமாகம பிரதேச சபையுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல் இதுவரை வெற்றியளிக்கவில்லை. எவ்வாறாயினும் நேர்வரிசை அமைச்சின் ஊடாக உரிய உள்;ராட்சி மன்றங்களுடன் கலந்துரையாடல்களை நடாத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| **4.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை** | |
| பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன. | |
| (அ) அதிகார சபை தமது நோக்கங்களுக்கு மாற்றமாக கம்பஹ மற்றும் நீர்கொழும்பு வைத்தியசாலைகளில் நீர் மற்றும் மலசல கழிவகற்றல் கட்டமைப்பை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ள போதிலும் அது தொடர்பாக முறையான ஒப்பந்தங்களை செய்து கொண்டிருக்கவில்லை. மீளாய்வு ஆண்டின் இறுதியில் கம்பஹ வைத்தியசாலையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 920,322.00 ஆகும். | (அ) கம்பஹ மற்றும் நீர்கொழும்பு வைத்தியசாலைகளின் நீர் மற்றும் மலசல கழிவகற்றும் கட்டமைப்பை செயற்படுத்துவது தொடர்பாக ஒப்பந்தம் ஒன்றை முறைப்படுத்துவதற்கு தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இந்த வைத்தியசாலையிடமிருந்து கிடைக்க வேண்டியிருந்த ரூபா 920,322 ஆன தொகையில் ரூபா 188,511.19 ஆன தொகை ஏற்கனவே கிடைத்திருப்பதுடன் எஞ்சிய தொகையை செலுத்துவதற்கு வைத்தியசாலை நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. |

| கணக்காய்வு அறிக்கை | அதிகாரசபையின் பதில் |
|---|---|
| (ஆ) கொழும்பு-04 பம்பலபிட்டி தேசிய வீடமைப்புத் திட்டத்தை அபிவிருத்தி செய்யும் கருத்திட்ட அறிக்கையை தயார் செய்யும் ஒப்பந்தம் அதிகார சபையின் உள்ளக பொறியியல் பிரிவு இருக்கின்ற நிலையில் வெளித்தரப்பினருக்கு ரூபா 3,500,000 ஆன தொகைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. | (ஆ) தற்போது காணப்படுகின்ற வீடமைப்புத் திட்டத்தை மீண்டும் அபிவிருத்தி செய்வதற்காக திட்டம் ஒன்றை தயார் செய்வது இந்த கருத்திட்டத்தின் மூலம் எதிர்பார்ப்பதுடன் அந்த பணிகள் பிரதானமாக கட்டட கலைஞர்களின் பணிகளாக இருக்கின்றன. இவ்வாறான கட்டட கலைஞர்கள் இந்த அதிகார சபையின் பதவியணியில் இல்லை மேலும் அதிகார சபை அந்த சந்தர்ப்பத்தில் காணப்பட்ட நிதி நிலைமைகள் காரணமாக ஒப்பந்ததாரருக்கு உடன்படிக்கைக்கு அமைய கொடுப்பனவுகளை செலுத்த முடியாமையினால் இந்த காலத்தை நீடிக்க வேண்டியிருந்தது.<br><br>அதற்கமைய இந்த இந்த பணிகள் தேவையான சந்தர்ப்பங்களில் மாத்திரம் வெளி நிறுவனங்களில் இருந்து பெற்றுக் கொள்ள அதிகார சபை செயற்படுகின்றது. |
| (i) இந்த ஒப்பந்த காலத்தை நீடிப்பதற்காக நியாயமான காரணங்கள் சமர்ப்பிக்கப்படாத நிலையில் 2012 ஒக்டோபர் 21ஆந் திகதி முதல் 2013 பெப்ருவரி 28 ஆந் திகதி வரை காலம் நீடிக்கப்பட்டிருந்த போதிலும் 2013 மே மாதம் மேற்படி அறிக்கை அதிகார சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | (i) அதிகார சபையில் காணப்பட்ட நிதி நிலைமையை கவனத்தில் கொண்டு உடன்படிக்கைக்கு அமைய கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியவில்லை. இந்த நிலை காரணமாக ஒப்பந்தக் காலப்பகுதிக்குள் உரிய அறிக்கையை பெற்றுக்கொடுக்க முடியாது போனதுடன் மீண்டும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது. தற்போது பூரணமான அறிக்கையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ii) இந்த ஒப்பந்தத்துக்கான முற்பணங்களை பெற்றுக்கொடுக்கும் போது அரசாங்க வளங்கள் நடைமுறைத் தொகுப்பின் அறிவுரைகளுக்கு அமைய பெற்றுக்கொடுக்க முடிவது ஒப்பந்த பெறுமதியில் 20 சதவீதத்தை மாத்திரமாகும். எனினும் அதற்கு முரணாக ஒப்பந்ததாரருக்கு 30 சதவீதம் அதாவது ரூபா 1,200,696 ஆன முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. இதற்கு முற்பணம் செலுத்துவதற்கான பாதுகாப்பு பிணைகளும் பெறப்பட்டிருக்கவில்லை. | (ii) இந்த அகருத்திட்ட அறிக்கையை உரிய காலப் பகுதிக்குள் பூர்த்தி செய்ய வேண்டிய தேவை இருந்ததனால் கட்டட கலைஞர் நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. |

| கணக்காய்வு அறிக்கை | அதிகாரசபையின் பதில் |
|---|---|
| (iii) மேற்படி ஒப்பந்தத்திற்கு போட்டித்தன்மை மிக்க விலை மனுக்கள் கோரும் முறையியல் பின்பற்றப்பட்டு பத்திரிகை மூலம் விலை மனுக்கள் கோரப்பட்டிருந்ததுடன் விலை மனுக்களை கையேற்கும் இறுதித்திகதி 2012 ஏப்ரல் 09ஆந் திகதியாக குறிப்பிட்டிருந்த போதிலும் வழிகாட்டல் தொகுப்பின் அறிவுரைகளுக்கு முரணாக விலை மனுக்கள் பகிரங்கமாக திறக்கப்படாது ஒரு விலைமனு 2012 ஏப்ரல் மாதம் 04ஆந் திகதி திறக்கப்பட்டுள்ளது. | (iii) இந்த கேள்விகளை தபால் மூலம் அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் உரிய பணிகள் குறிப்பிடப்பட்டிருக்காமையினால் நிறுவனத்தின் தபால் மூலப் பிரிவினால் திறக்கப்பட்டு அன்றைய தினத்தின் முத்திரையும் பதிக்கப்பட்டிருந்தது. பின்னர் இந்த விலைமனு கேள்விப் பெட்டியில் இடப்பட்டு அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன் காரணமாக இவ்வாறு உரிய திகதியின் முத்திரைகள் 2 இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. மேலும் எதிர்காலத்தில் இவ்வாறு கிடைக்கின்ற கேள்வி மனுக்களை நிராகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| **4.3 கருத்து முரண்பாடுகளுக்கு காரணமாகின்ற கொடுக்கல் வாங்கல்கள்** | |
| பராமரிப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக முகாமைத்துவக் கூட்டுத்தாபன நிதியமாக தேசிய வீடமைப்பு அதிகார சபையிடமிருந்து ரூபா 6,751,832 ஆன தொகை 2010.01.08 ஆந் திகதி கிடைத்த போதிலும் 2012.12.31ஆந் திகதியளவில் முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை தாபிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேற்படி தொகை 2010 ஆம் ஆண்டில் நிலையான வைப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளதுடன் மீளாய்வு ஆண்டின் இறுதியில் அதன் மீதி ரூபா 7,810,432ஆக இருந்தது.<br><br>“தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு இதுவரை இந்த சொத்துக்கள் தொடர்பான இயைபுச் சான்றிதழை பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதனால் உறுதிகளை வழங்க முடியாதிருப்பதாகவும் இந்த நிலைமை காரணமாக முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை தாபிப்பது தாமதமடைந்திருப்பதுடன் ரூபா 7,810,432ஆன குறித்த தொகையை அதிகார சபையில் தொடர்ந்தும் வைத்திருக்க வேண்டி இருப்பதாகவும் பொது முகாமையாளர் எனக்கு அறியத்தந்துள்ளார்”. | இந்த தொகை கொழும்பு-08 இல் அமைந்துள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்ட எட்மன்டன்ட் அரசாங்க ஊழியர்களுக்கான வீடமைப்புத் தொகுதியின் முகாமைத்துவக் கூட்டுத்தாபனம் சம்பந்தமான பராமரிப்புத் தொகையாகும். இந்த ஆதனத்திற்கு இன்றுவரை இயைபுச் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ள முடியாது போயிருப்பதனால் சட்டபூர்வமாக முகாமைத்துவ கூட்டுத்தாபனங்கள் தாபிக்கப்படவில்லை. எனவே தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பொறுப்பில் இருந்த இந்த தொகை அதிகார சபைக்கு பெற்றுக் கொள்வதற்காக 2008.12.24ஆந் திகதி நடைபெற்ற 52வது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதுடன் அதற்காக எட்மன்டன்ட் வீடமைப்புத் திட்டத்தின் முகாமைத்துவக் குழுவினால் எழுத்து மூலம் இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டது. |

| கணக்காய்வு அறிக்கை | அதிகாரசபையின் பதில் |
|---|---|
| **4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்** | |
| மீளாய்வு ஆண்டில் அதிகார சபை பயன்படுத்திய 3 கெப் வண்டிகள் மற்றும் ஒரு கார் வண்டியை ஏலத்தில் விற்பனை செய்வதற்காக சந்தை விலை மதிப்பு அறிக்கைகளை பெற்றுக் கொண்ட பின்னர் மற்றும் ஏலத்தில் விற்பனை செய்வதற்கு அந்த வாகனங்களின் புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 57,787 செலவிடப்பட்டிருந்தது. | அதிகார சபையின் 10 வருடங்களுக்கும் அதிகமான பழமைமிக்க 4 வாகனங்களை அகற்றுவதற்காக 2011ஆம் ஆண்டில் தீர்மானிக்கப்பட்டது.<br><br>இந்த வாகனங்கள் அன்றாட நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த வாகனங்களாகும் என்பதுடன் அந்த வாகனங்களை அகற்றிய பின்னர் புதிய வாகனங்களை கொள்வனவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியிரந்தது.<br><br>எனினும் அதற்காக திறைசேரியின் அங்கீகாரம் கிடைப்பது தாமதமடைந்ததினால் இந்த பணிகள் 2012 மே மாதம் வரை தாமதமடைந்தது. அதற்கமைய இந்த வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வந்த வாகனங்களாக இருப்பதனால் 2012 மே மாதத்தில் மீண்டும் விலை மதிப்பு அறிக்கைகளை பெற்றுக் கொள்ள வேண்டி ஏற்பட்டதுடன் அந்த திகதியின் பின்னர் இந்த வாகனங்களை புதுப்பித்தலுக்காக செலவிடப்பட்டுள்ள தொகை ரூபா 57,787 ஆகும்.<br><br>இந்த வாகனங்களை சேவிஸ் தேவைக்கமைய பயன்படுத்தியுள்ள நிலையில் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதனால் இவ்வாறு செலவினங்கள் செய்ய வேண்டி ஏற்பட்டது. விலைமதிப்பு பெறுமதி மற்றும் ஏல விற்பனை செய்வதற்கு முன்னர் இந்த வாகனங்களுக்காக செய்ய வேண்டிய செலவினங்கள் ஆகிய இரண்டினதும் மொத்த தொகையிலும் பார்க்க அதிகமான பெறுமதிக்கு இந்த வாகனத்தை விற்பனை செய்ததன் மூலம் அதிகார சபை இலாபம் உழைத்துள்ளது. |
| **4.5 ஒப்பந்த நிர்வாகம்** | |
| மீளாய்வு ஆண்டில் கூட்டாட்சி முகாமைத்துவ அதிகார சபையினால் புதுப்பிக்கப்பட்ட 7 வீடமைப்புகளுக்காக ரூபா 55.5 மில்லியன் ஆன தொகை திறைசேரி ஏற்பாடுகள் ஆண்டினுள் கிடைத்திருந்தது. அதிகார சபையினால் மேற்படி வீடமைப்புகளை புதுப்பிப்பதற்காக ரூபா மில்லியன் 65.22 பெறுமதி மிக்க 7 விலை மனுக்களை கோருவதற்கு பதிலாக அந்த வளங்களின் பெறுமதி 36 உப பகுதிகளாக பிரிக்கப்பட்டு விலை மனுக்கள் கோரப்பட்டிருந்தன. அமைச்சின் வளங்கள் குழுவுக்கு பதிலாக திணைக்கள மட்டத்தில் விலை மனுக்களை கோருவதே இதன்மூலம் எதிர்பார்க்கப்பட்டிருந்ததாக கணக்காய்வின் போது தெரியவந்தது. | குறித்த பணிகள் உரிய ஆண்டினுள் நிறைவு செய்ய வேண்டியிருந்தமை மற்றும் மிகவும் வினைத்திறனுடன் நிறைவேற்றப்பட வேண்டியதை நோக்காகக் கொண்டு இவ்வாறு பகுதி பகுதியாக கேள்வி கோரப்பட்டது.<br><br>மேலும் இவ்வாறு பகுதி பகுதியாக கேள்வி கோருவதன் மூலம் பாரியளவில் கேள்விகளை கோருவதற்காக வழங்க வேண்டிய ஏற்பாடுகள் (நிர்வாக நடவடிக்கைகள் போன்றன) இந்த மதிப்பீடுகள் மூலம் நீக்கப்பட்டு கேள்விகள் கோரும் ஆற்றல் கிடைத்துள்ளது |

| கணக்காய்வு அறிக்கை | அதிகாரசபையின் பதில் |
|---|---|
| குறித்த பணியை உரிய ஆண்டினுள் நிறைவு செய்ய வேண்டியிருந்தமை மற்றும் மிகவும் வினைத்திறனுடன் நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கத்துடன் இவ்வாறு பகுதி பகுதிகளாக கேள்வி கோரப்பட்டதாகவும் அவ்வாறு கேள்வி கோருவதன் மூலம் பாரியளவிலான கேள்விகளுக்கு வழங்க வேண்டிய ஏற்பாடுகள் (நிர்வாக நடவடிக்கைகள் போன்றன) இந்த மதிப்பீடுகளில் இருந்து நீக்கப்பட்டு கேள்வி கோரும் ஆற்றல் கிடைத்திருப்பதாக பொது முகாமையாளர் எனக்கு அறியத்தந்துள்ளா. ர். | |

## 4.6 மனித வள முகாமைத்துவம்

மீளாய்வு ஆண்டில் அதிகார சபையின் பதவியணியினர் பற்றிய விபரங்கள் பின்வருமாறு

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவி அணியினர் | உண்மையான பதவி அணியினர் | வெற்றிடம் |
|---|---|---|---|
| பதவி நிலை | 15 | 07 | 08 |
| இரண்டாம் நிலை | 71 | 54 | 17 |
| இரண்டாம் நிலை | 52 | 49 | 03 |
| | 138 | 110 | 28 |

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.

| கணக்காய்வு அறிக்கை | அதிகாரசபையின் பதில் |
|---|---|
| (அ) பிரதிப் பொது முகாமையாளர் (ஒழுங்குபடுத்தல்) பதவி மற்றும் உதவிப் பொது முகாமையாளர் பதவிகள் 7 நீண்ட காலமாக வெற்றிடமாகக் காணப்படுவது அதிகார சபையின் செயலாற்றுகையில் நேரடியாகத் தாக்கம் செலுத்தியுள்ளது. | (அ) பிரதிப் பொது முகாமையாளர் (ஒழுங்குபடுத்தல்) உதவிப் பொது முகாமையாளர் (மனிதவளம்) ஆகிய பதவிகளுக்குப் பத்திரிகைகள் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள போதிலும் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் இல்லாமையினால் ஆட்சேர்ப்பு செய்து கொள்ள முடியவில்லை. உதவிப் பொது முகாமையாளர் (நடவடிக்கை / பராமரிப்பு) பதவிகளை பதவிகளை நிரப்புவதற்காக 2012ஆம் ஆண்டில் விண்ணப்பம் கோரப்பட்டது. எதிர்காலத்தில் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட உள்ளன. பிரதிப் பொது முகாமையாளர் ஒழுங்குபடுத்தல் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்ட போதிலும் உரிய பதில் கிடைக்காமையினால் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ள திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

| கணக்காய்வு அறிக்கை | அதிகாரசபையின் பதில் |
|---|---|
| (ஆ) மேலும் இரண்டாம் நிலையான 17 பதவிகள் மற்றும் ஆரம்ப நிலையிலான 3 பதவிகளுக்கு வெற்றிடங்கள் காணப்படுகின்ற போதிலும் மீளாய்வு ஆண்டில் அலுவலர்கள் எவரும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | (ஆ) இரண்டாம் நிலையின் பதவிகளான சிரேஷ்ட பொறியியல் உதவியாளர் பதவிகளுக்கும் மேலே உள்ள நிலை காணப்படுவதனால் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அறிவித்து ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதிகள் தளர்த்தப்பட்டுள்ளன. அதற்கமைய 2014 ஆம் ஆண்டில் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருப்பதுடன் ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.<br><br>எவ்வாறாயினும் நிறுவனத்தில் காணப்படுகின்ற நிதி நிலைமைகளை கவனத்தில் கொண்டு செயலாற்றுகைக்கு தாக்கங்கள் ஏற்படாதவாறு அத்தியாவசியமான கடமைகளுக்கு உரிய பதவிகளின் வேலைகளை பகிர்ந்தளிப்பதன் மூலம் அவையும் நிறைவு செய்து கொள்ளப்பட்டுள்ளன. |
| **4.7 வாகனங்களை பயன்படுத்தல்** | |
| அதிகார சபைக்கு உரித்தானதாக 8 வாகனங்கள் காணப்படுவதுடன் மேற்படி வாகனங்களுக்கு மீளாய்வு ஆண்டில் ரூபா 2,902,536 எரிபொருள் செலவினமாகவும் ரூபா 3,647,808 புதுப்பித்தல் மற்றும் பராமரிப்புச் செலவினமாக செலவிடப்பட்டிருந்ததனால் ஒரு கிலோ மீற்றருக்கான பொதுவான உபயோகச் செலவினம் ரூபா 32-36க்கு இடைப்பட்டதாக காணப்பட்டது. மேலும் முன்னைய ஆண்டில் ஒரு கிலோ மீற்றருக்கு பொதுவான உபயோகச் செலவினத்திலும் பார்க்க மீளாய்வு ஆண்டின் செலவினம் அதிகரித்திருப்பதாக அவதானிக்கப்பட்டது. | 2012ஆம் ஆண்டில் பழைய வாகனங்கள் அனைத்தும் உபயோகத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அவற்றை புதுப்பிக்கும் நடவடிக்கைகள் உயர் மட்டத்தில் காணப்பட்டன.<br><br>மேலும் இந்த விடயத்திற்கு மேலதிகமாக எரிபொருள் விலை அதிகரித்தல் மற்றும் உதிரிப்பாகங்களின் விலை அதிகரித்தமை போன்ற காரணங்களும் இந்த நிலைக்கு காரணமாக இருக்கின்றன.<br><br>இந்த நிலை காரணமாக இருப்பது 10 வருடங்களுக்கும் அதிகமான பழைமை காலத்தைக் கொண்ட வாகனங்களை புதுப்பிப்பதற்காக செய்யப்பட்ட செலவினங்களாகும். 2012ஆம் ஆண்டின் இறுதியில் இந்த வாகனங்கள் பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டு புதிய வாகனங்களை கொள்வனவு செய்தமையினால் புதுப்பித்தலுக்காக செய்கின்ற செலவினம் குறைத்துக் கொள்ளப்பட்டது. |
| **5 கணக்குகள் நடவடிக்கைகளும் நல்லாட்சியும்** | |
| **5.1** | |
| 2003 ஜூன் மாதம் 02ஆந் திகதிய பிஈடி/12ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கைக்கு அமைய அதிகார சபையின் கூட்டுத் திட்டத்தை தயார் செய்யும்போது பின்பற்ற வேண்டிய பி-ன்வரும் தகவு திறன்கள் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>(அ) கடந்த மூன்று ஆண்டுகளின் செயற்பாட்டு நடவடிக்கைகள்<br>(ஆ) வருடாந்தம் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளின் அளவுகள் | 2011ஆம் ஆண்டு முதல் கூட்டுத்திட்டத்தை தயார் செய்யும்போது இந்த தகவு திறன்களும் கவனத்தில் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது |

| கணக்காய்வு அறிக்கை | அதிகாரசபையின் பதில் |
| --- | --- |
| **5.2 செயல் ரீதியான திட்டம்** | |
| செயல் ரீதியான திட்டத்தின் இலக்குகள் மற்றும் அவற்றை அடைந்து கொள்வதற்கு இடையே குறிப்பிடத்தக்களவு வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. இலக்குகளை நிறைவேற்றிக் கொள்ளும் நிலைமைகள் காலத்திற்கு ஏற்ப மீளாய்வு செய்யப்பட்டு பலவீனங்கள் இனங்கணப்பட்டு அதற்கு தீர்வுகளை வழங்குவதற்கு முகாமைத்துவம் உரிய கவனம் செலுத்தியிருக்கவில்லை. இந்த நிலைமை அதிகார சபையின் பலவினமான நிதி நிலைமைக்கும் தொடர்ச்சியான நிலைத்திருத்தலுக்கும் நேரடியாக தாக்கம் செலுத்தியுள்ளது. | இலக்குகளை மீளாய்வு செய்வதற்கான பதவிநிலைக் கூட்டங்கள் தொழில்நுட்ப அலுவலர்களின் கூட்டங்கள் நாளாந்தம் நடாத்தப்பட்டு செயலாற்றுகையை மதிப்பீடு செய்யும் நடைமுறை அதிகார சபையினால் பின்பற்றப்பட்டது. மேலும் ஒவ்வொரு காலாண்டுக்கும் ஒரு முறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்களின் போது இந்த நடவடிக்கைகள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்படுகின்றன. எனினும் அதிகார சபையின் நிதி நிலைமைகள் மற்றும் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் தொடர்பாக பிரதானமாக தாக்கம் செலுத்தியிருப்பது செயலாற்றுகை தொடர்பில் முகாமைத்துவத்தின் உரிய கவனம் செலுத்தாமை அல்லது என்பதுடன் கூட்டாட்சி நிர்மாணிப்புத் துறையில் ஏற்பட்டிருந்த மோசமான நிலைமையாகும். |
| **5.3 முகாமைத்துவ குழுவின் ஒழுங்கமைப்பு** | |
| 2003இன் 24ஆம் இலக்க பொது வசதிகள் சபை சட்டத்திற்கு அமைய முகாமைத்துவ சபையானது உத்தியோகபூர்வமாக நியமனம் பெறுகின்ற 9 அங்கத்தவர்கள் மற்றும் அமைச்சரினால் நியமனம் செய்யப்படுகின்ற 6 அங்கத்தவர்களைக் கொண்டிருக்க வேண்டுமாயினும் மீளாய்வு ஆண்டில் முகாமைத்துவ சபையின் அங்கத்தவர்கள் அமைச்சரினால் நியமனம் செய்யப்படுகின்ற 2 அலுவலர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தது. | அமைச்சரினால் நியமனம் செய்யப்பட வேண்டிய பிரதிநிதிகளான வீடமைப்புக்கான அடகு கடன் வழங்குவோர் சங்கம் தனியார் துறையின் அபிவிருத்தியாளர் சங்கம் போன்ற நிறுவனங்கள் 2013 டிசெம்பர் இறுதிவரை முறையாக தாபிக்கப்பட்டிருக்காமையினால் இந்த பிரதிநிதிகளை முகாமைத்துவ சபைக்கு நியமனம் செய்ய முடியவில்லை.<br>முகாமைத்துவக் கூட்டுத்தாபனங்களை பிரதிநிதித்துவம் செய்வதற்காக பிரதிநிதி ஒருவர் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளார். |
| **5.4 வரவு செலவுத்திட்ட கட்டுப்பாடு** | |
| அதிகார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களுக்கமைய வரவு செலவுத்திட்ட மற்றும் உண்மையான தொகைகளுக்கு இடையே குறிப்பிடத்தக்க அளவு வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டதனால் வரவு செலவுத்திட்டம் உற்பத்தித்திறனான முகாமைத்துவ கட்டுப்பாட்டு பொறிமுறையாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கிழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன. | |
| (அ) கருத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக கிடைக்கின்ற சேவைக்கட்டண வருமானத்தை வரவு செலவுத்திட்டத்துடன் ஒப்பிடும்போது உண்மையான சேவைக்கட்டணம் 48.26 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது . | (அ) 2012ஆம் ஆண்டுக்கு திறைசேரியினால் வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் இருந்து ரூபா மில்லியன் 53.7 மேற்படி ஆண்டில் கிடைக்காமையினால் இந்த வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. |
| (ஆ) கூட்டாட்சி சான்றிதழ்களை வழங்குவதற்கான வருமானத்தை வரவு செலவுத்திட்டத்துடன் ஒப்பிடும்போது உண்மை வருமானம் 65 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. | (ஆ) குறித்த நிறுவனங்கள் 2012ஆம் ஆண்டில் நிறைவு செய்ய உத்தேசித்திருந்த கூட்டாட்சி கருத்திட்டங்கள் பல்வேறு காரணங்களினால் நிறைவு செய்யப்படாமை காரணமாக சான்றிதழ் வருமானம் வீழ்ச்சியடைய காரணமாக இருந்தது.<br><br>இந்த அதிகார சபையினால் கட்டுப்படுத்த முடியாத காரணங்களின் அடிப்படையில் சான்றிதழ் வருமானம் இவ்வாறு வீழ்ச்சியடைந்துள்ளது. |

| கணக்காய்வு அறிக்கை | அதிகாரசபையின் பதில் |
|---|---|
| (இ) வரவு செலவுத் திட்டத்தின் படியான செலவினத்தை உண்மையானக செலவினத்துடன் ஒப்பிடும் போது 16 சதவீதத்தில் இருந்து 84 சதவீதம் வரையிலான வித்தியாசத்தில் வரவு செலவுத் திட்டத்தின் படியான செலவினத்திலும் பார்க்க உண்மை செலவினம் குறைந்திருந்ததுடன் வரவு செலவுத் திட்டத்தின் படியான செலவினம் உரியவாறு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. | (இ) சகல செலவினங்களையும் கட்டுப்படுத்தியமை மற்றும் நிதி நிலைமைகளை கவனத்தில் கொண்டு சில செலவினங்களை மட்டுப்படுத்தியமை மற்றும் வாகனங்களை பிற்போடப்பட்ட கொடுப்பனவு முறையின் கீழ் கொள்வனவு செய்வது தாமதமடைந்து ஆண்டின் மத்தியில் இடம்பெற்றமையினால் அதற்கான தவணைக் கட்டணங்களை செலுத்துவது குறைந்தமை போன்ற விடயங்கள் இந்த வித்தியாசத்திற்கு காரணமாக இருக்கின்றன. |
| **5.5 வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்** | |
| அதிகார சபையினால் 2011ஆம் அண்டுக்குரிய ஆண்டறிக்கை மீளாய்வு ஆண்டின் இறுதிவரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2011ஆம் ஆண்டுக்குரிய ஆண்டறிக்கை தயார் செய்யப்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது |
| **6 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்** | |
| கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளும் கட்டுப்பாடுகளும் சம்பந்தமான குறைபாடுகள் அடிக்கடி அதிகார சபையின் தவிசாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. கிழே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்.<br><br>(அ) வாகனப் பயன்பாடு<br><br>(ஆ) கணக்குகள்<br><br>(இ) கூட்டாட்சி ஆதனங்களை இனங்காணல்<br><br>(ஈ) ஒப்பந்த நிர்வாகம்<br><br>(உ) கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் சம்பந்தமான நிாவாகம் | உங்களின் உவதானிப்புகள் கவனத்தில் கொள்ளப்பட்டு உரிய துறைகள் தொடர்பில் அதிக கவனங்களை செலுத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. |




டபில்யூ.பி.சீ.விக்ரமரத்ன,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)